REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 12 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 218 | Thursday 12, September, 2024 | 20பக்கங்கள் | 50/-




## செப்டெம்பர் மாதம் முதல் அமுலாகும் வகையில்

# தனியார் துறையினரது குறைந்தபட்ச சம்பளம் 21,000 ரூபாவாக அதிகரிப்பு

## ஊழியர்கள் EPF, ETF செலுத்த வேண்டிய குறைந்தபட்ச வரம்பும் அதிகரிப்பு

### தொழிலாளர், வேலைவாய்ப்பு அமைச்சு அறிவிப்பு

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளம் 21,000 ரூபாவாக அமையும் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று கையொப்ப மிட்டுள்ளார். இதன்படி ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைக்கான குறைந்தபட்ச சம்பள மாக இது கருதப்படவேண்டுமென தொழி லாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

தனியார்துறை முதலாளிமார் தமது ஊழியர் களுக்கு 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட நிவாரணச் சட்டங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத் தின்மூலம் செலுத்தப்படவேண்டிய தேசிய குறைந்தபட்ச மாத சம்பளம் 17,500 ரூபா மற்றும் 3,500 ரூபா கொடுப்பனவு கள் உட்பட 21,000 ரூபாவை

06

## திசைகாட்டியின் முறையான பொருளாதார கொள்கை என்ன?

### என்னை விவாதத்துக்கு அழைப்பதற்கு முன் நீங்கள் ஒன்றுகூடி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள்

ஜனாதிபதி ரணில், அநுர குழுவுக்கு சவால்

குருநாகல் மாவட்ட நிபுணர்கள், வர்த்தகர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



குருநாகல் நகரிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்

என்னை விவாதத்துக்கு அழைக்கும் அநுரகுமார திசாநாயக்க, அதற்கு முன்னர் அநுர, சுனில் ஹந்துன்நெத்தி, ஹர்ஷன சூரி யப்பெரும ஆகியோர் தனியாக விவாதம் நடத்தி திசைகாட்டியின் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை கூற வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். திசைகாட்டியின் பொருளாதாரக் கொள்கை ஏற்றுமதிப் பொருளாதாரமா? இறக்குமதிப் பொருளாதாரமா? என நான் கேட்ட கேள் விக்கு பதிலளிக்காத அநுர என்னை விவாதத்துக்கு அழைக்கிறார்.

06



02

## பங்களாதேஷில் மின் வெட்டு; நாளாந்த வாழ்வில் பாதிப்பு

மின்சார பிரச்சினையை கையாள்வதில் இடைக்கால அரசு நெருக்கடி

ITN தொலைக்காட்சியின்

## 'துலாவ' நிகழ்ச்சியில் அமைச்சர் பந்துல இன்று

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் இன்று (12) காலை 10 மணிக்கு ஒளிபரப்பாகும் நாட்டின் பொருளாதாரக் கொள்கை என்ற தொனிப்பொரு ளில் நடத்தப்படும் 'துலாவ' நிகழ்ச்சியில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் கலந்து கொள்ளவுள்ளார். அரசாங்கத்தை பிரதி நிதித்துப்படுத்தி அமைச்சர் கலந்து கொள்வதுடன் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதித்துப்படுத்தி பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் பிரசன்ன பெரேரா, தேசிய மக்கள் சக்தியை பிரதித்துப்படுத்தி ஜயவர்தன பல்கலைக்கழக பேராசிரியர் ஜனத் குமாரசிங்க, சர்வ அதிகாரத்தை

06

## ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச சம்பள (திருத்தச்) சட்டமூலம்

### சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச சம்பளம் (திருத்தச்) சட்டமூலத்தில், அரசியலமைப்பின் 79 உறுப்புரைக்கமைய சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன நேற்று (11) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

2016ஆம் ஆண்டு 03ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச சம்பள சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் கடந்த 03ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில், இச் சட்டமூலம்

06

முன்னாள் சுகாதார அமைச்சர்

## கெஹெலிய 07 மாதங்களின் பின் நேற்று பிணையில் விடுதலை



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல்ல உட்பட மூவரை பிணையில் விடுதலை செய்ய மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை (11) உத்தர விட்டுள்ளது. தர மற்ற

06



03

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பொலிஸார் விசேட அறிவுறுத்தல்



02

## ஹிருணிகாவுக்கு நாளை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

06

## மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியை அவமதிக்கும் வகையில் சுவரொட்டிகள்; மூவர் கைது!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பிரதான சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுப்போம்

பேராயரிடம் சஜித் வாக்குறுதி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

06

## நாட்டில் வன்முறையை தூண்டும் வெளிநாட்டின் யூடியூப் சேனல்

### இராணுவ உளவுத்துறை CID யில் முறைப்பாடு

நாட்டில் வன்முறையை தூண்டும் யூடியூப் சேனலுக்கு எதிராக இராணுவ உளவுத்துறை பணிப்பாளரினால் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து யூடியூப் சேனல்மூலம் உளவுத்துறை பொறிமுறையையும் தேசிய பாதுகாப்பையும் பாதிக்கும் வகையில் செய்திகளை உருவாக்கி, அந்த யூடியூப் சேனல் மூலம் ஒளிபரப்பை மேற்கொள்கின்றனர்.

இந்த சேனல்களில், நாட்டின் தேசிய பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும், உளவுத்துறை அதிகாரிகளின் பெயர்களை வெளிப்படுத்தியும் அவர்களின் வாழ்க்கையை பாதுகாப்பற்றதாக்கியும், இலங்கை பொலிஸாரை அரசியலிலிருந்து விடுவிப்பதற்கான சர்வதேச

06

பிரிட்டனில் புலம்பெயர் தமிழர்கள்

## ஓவல் மைதானத்துக்கு முன்னால் புலிக் கொடியுடன் ஆர்ப்பாட்டம்

### இலங்கை அரசு கடும் அதிருப்தி வெளியீடு



இங்கிலாந்தின் ஓவல் மைதா னத்துக்கு வெளியே தமிழ் புலம் பெயர் செயற்பாட்டாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டமை குறித்து இலங்கை அரசாங் கம் தனது எதிர்ப்பை வெளியிட் டுள்ளது. இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு

06

## இராஜாங்க அமைச்சராக சீதாஅரம்பேபொல நியமனம்



மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக, பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி சீதா அரம்பே பொல ஜனாதி பதி ரணில் விக்கி ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சராக இருந்த கீதா குமாரசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்ததையடுத்து அவர்

06



06

## பூமியை நோக்கி வரும் இராட்சத விண்கோள்

15ஆம் திகதி பூமியை கடந்து செல்லும்




06

## ஹெரோயினுடன் கைதான நபரொருவருக்கு மரண தண்டனை

கண்டி மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

கட்சியின் விசேட குழு தலைமையில்

## சகல தேர்தல் விஞ்ஞாபனங்களையும் ஆராய்ந்து முடிவை அறிவிப்போம்

### எஸ். சிறிதரன்



ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானம் முறையாக மேற்கொள்ளப்படாத பின்னணியில், சகல ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ் ஞாபனங்களையும் மீண்டும் நன்கு ஆராய்ந்து, யாருக்கு ஆதரவளிப் பதென்பது குறித்து எதிர்வரும் 14 ஆம் அல்லது 15 ஆம் திகதிகளில் தமிழரசுக்கட்சி அறிக்கையொன்றை வெளியிடுமென இலங்கைத்

06

கட்சிதாவும் அரசியல் நிறுத்தப்பட வேண்டும்

## நாட்டில் கொள்கை ரீதியான அரசியலை கட்டியெழுப்புவேன்



கொள்கை ரீதியான அரசிய லைக்கொண்ட ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியென ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநா யக்க தெரிவித்தார். கேகாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பி டுகையில்,

06

தேசிய மக்கள் சக்தியின் அநுர தரப்புக்கு

## கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அடிப்படை அறிவுகூட கிடையாது

### ஹர்ஷ டி சில்வா



அநுரகுமார திசாநயாக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்திக்கு, கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடிப்படை அறிவுகூட கிடையா தென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பகுதியில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

06

## அடுத்து பத்து வருடங்களுக்குள் 20 இலட்சம் வேலைவாய்ப்புகள்

### SLPP நாமல் ராஜபக்ஷவின் திட்டம்



10 வருடங்களுக்குள் 20 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் தன்னிடம் இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பா ளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து

06

# பங்களாதேஷில் மின் வெட்டு நாளாந்த வாழ்வில் பாதிப்பு




சர்வதேச செய்திகள்



பங்களாதேஷில் மின் விநியோகத்தில் பிரச்சினையை எதிர்கொண்டிருக்கும் நிலையில் தலைநகர் டாக்காவில் தினசரி நான்கு மணி நேர மின்சார துண்டிப்பை எதிர்கொண்டிருப்பதோடு தலைநகருக்கு வெளியில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

தேவைக்கு ஏற்ப மின் உற்பத்தியை மேற்கொள்ள பங்களாதேஷ் அரசு சிரமத்தை எதிர்கொண்டிருக்கும் நிலையில் பல தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. இதில் பரபுகூரியா மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டிருப்பதோடு அதானி பவர் நிறுவனமும் மின் விநியோகத்தை குறைத்துள்ளது. அதேபோன்று எரிபொருள் குறைபாடு ஐம்பது மின் உற்பத்தி நிலையங்களை பாதித்துள்ளது.

இந்நிலையில் டாக்கா நகரின் பல பகுதிகளும் மின்சாரம் இன்றி இருண்டு காணப்படுவதோடு பல வர்த்தகங்களும் ஸ்தம்பித்துள்ளன. கடும் வெப்பத்திற்கு மத்தியில் மின்சாரம் இல்லாதது நகர மக்களிடை கோபத்தை அதிகரித்துள்ளது.

பங்களாதேஷில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து பதவி ஏற்றிருக்கு இடைக்கால அரசுக்கு நாட்டில் நிலவும் மின்சார பாதிப்பு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதோடு பாரியளவில் செலுத்தப்படாத கட்டணங்கள் மற்றும் தரமற்ற மின் உற்பத்தி நிலையங்களால் மின்துறை நலிவடைந்துள்ளது. அது விரைவில் புத்துயிர் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

மின்சாரத் தேவை அண்மையில் 14,000 மற்றும் 16,000 மெகாவோட் அளவு இருப்பதோடு மேலும் அந்தத் தேவை அவ்வப்போது 2,000 மெகாவோட் அளவு அதிகரித்து வருகிறது. 27,000 மெகாவோட் உற்பத்தித் திறன் இருந்தும், நாடு ஏன் இவ்வளவு கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கிறது என்று பலர் கேள்வி எழுப்புவதற்கு இது வழிவகுத்துள்ளது.

இந்த மின்சார பிரச்சினைக்கு பிரதான காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு உள்ளது. குறைந்தது 54 மின் உற்பத்தி ஆலைகள் எரிவாயு மற்றும் எண்ணெய் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளன. மட்டார்பரி மின் உற்பத்தி நிலையமும் நிலக்கரி தட்டுப்பாட்டால் பிரச்சினையை சந்தித்துள்ளது. அதானியிடம் இருந்து மின் விநியோகமும் குறைந்துள்ளது.

இது தவிர, இயந்திர மற்றும் தொழில்நுட்ப பிரச்சினையால் 41 மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் எல்.என்.ஜி. முனையம் பராமரிப்புக்காக கடந்த மூன்று மாதங்களாக மூடப்பட்டிருப்பது நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

# பாகிஸ்தான் IMF கடனை பெறுவதில் இழுபறி



சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) இருந்து 7 பில்லியன் டொலர் கடனைப் பெறுவதில் பாகிஸ்தான் நெருங்கடியை சந்தித்துள்ளது. அந்தக் கடன் பிணைக்கான தேவைகளை பூர்த்தி செய்ய அந்த நாடு தவறி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்துடன் பாகிஸ்தான் கடந்த ஜூலையில் கடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது. இந்த உடன்படிக்கையை உறுதி செய்வதற்கு நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தை பெற வேண்டும். எனினும் இந்த நிறைவேற்றுக் குழுவின் தற்போதைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் உள்ளடக்கப்படவில்லை.

இந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில் நாளை முடிவடையவுள்ளது. இதன் இறுதிக் கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் எந்த ஒரு கூட்டத்திலும் பாகிஸ்தான் விடயம் உள்ளடக்கப்படவில்லை என்று செய்தி வெளியாகி உள்ளது.

# பங்களாதேஷிடம் நிலுவை பணத்தை கேட்கிறார் அதானி

மின்சாரம் வழங்கியதன் நிலுவைத் தொகையாக உள்ள 800 மில்லியன் டொலர்களை விரைவாக செலுத்தும்படி இந்தியாவின் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி பங்களாதேஷ் இடைக்கால அரசை கேட்டுள்ளார்.

இந்தியாவில் உள்ள 1,600 மெகாவோட் திறன் கொண்ட கோடா நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து, மின்சாரத்தை அதானி பவர் நிறுவனம் பங்களாதேஷ் நாட்டுக்கு அளிக்கிறது. இதற்கான ஒப்பந்தம், அதானி குழுமத்திற்கும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசுக்கும் மத்தியில் கையெழுத்தானது.





எனினும் இந்த ஒப்பந்தம் தற்போது பல விமர்சனங்களைச் சந்தித்து வரும் நிலையிலேயே பங்களாதேஷ் இடைக்கால அரசுக்கு அதானி அழுத்தம் கொடுத்துள்ளார். இது தொடர்பில் கடந்த ஒகஸ்ட் 27 ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றை இந்திய பெரும் செல்வந்தரான அதானியால், பங்களாதேஷ் இடைக்கால அரசின் ஆலோசகர் முஹமது யூனிஸுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதில், 'பங்களாதேஷ் வலுசக்தி அபிவிருத்தி சபையிடம் இருந்து கிடைக்க வேண்டி உள்ள 800 மில்லியன் டொலரை பெறுவதற்கு தலையிட வேண்டும்' என்று கோரியுள்ளார்.

முஹமது யூனிஸ் தலைமையிலான பங்களாதேஷ் நாட்டின் இடைக்கால அரசு, அதானி குழுமத்துடனான இந்த ஒப்பந்தம் மிகவும் செலவு மிக்க உட்கட்டமைப்பு திட்டம் என குறிப்பிடுகிறது. இதனால் இந்த நிலுவைத் தொகையைப் பெறுவதில் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளது என்று அதானி பவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அரசு, உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின் நிதி உதவியை நாடி வரும் வேளையில் அதானி குழுமத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை அந்நாட்டுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் பங்களாதேஷ் அரசு, முந்தைய எனர்ஜி ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்த அரசு, இந்தியா மற்றும் சீனாவுடன் சமநிலையான உறவைப் பேணுவதில் கவனம் செலுத்துகிறது. இந்த மும்முனை கூட்டணியில் வெளிப்படையான உள்கட்டமைப்பு ஒப்பந்தங்களை உருவாக்க முன்வந்துள்ளது.

### மாகாணசபை தேர்தலை நடத்திய பின்னர்

# கிழக்கின் அபிவிருத்திக்கான அதிகாரம் அந்த மாகாண சபைக்கே வழங்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**(திருக்கோவிலிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம் )**

மாகாண சபைத் தேர்தலை நடத்தி கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்களை அதற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவதற்கு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் நாடு முன்னேற்றம் அடையும்போது கிழக்கு மாகாணமும் முன்னேற்றமடையும் எனவும் அதற்கான வேலைத் திட்டங்களை இப்போதே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"இயலும் ஸ்ரீலங்கா" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் கிழக்கில் திருக்கோயிலில் நேற்று (11) நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க,

இந்த திருக்கோயில் பிரதேசத்துக்கு நான் கடந்த சுனாமி காலத்தில் வந்து இங்குள்ள கோயில் பகுதியில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிச் சென்ற ஞாபகம். இந்தப் பிரதேசம் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனாலும் மேலும்



பல பிரச்சினைகள், அபிவிருத்தி செய்ய வேண்டிய பல துறைகள் காணப்படுவதாக இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் உட்பட பலரும் தெரிவித்தனர்.

நாட்டைக் கட்டியெழுப்பும்போது இந்த திருக்கோயில் பிரதேசத்தையும் கட்டியெழுப்ப நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்.

திருக்கோவிலுக்கு புதிய பொருளாதாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தி விவசாயிகள், மீனவர்கள், சுய தொழிலாளர்கள் என அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் பல அபிவிருத்திகளை, ஊக்குவிப்புகளை மேற்கொள்வோம்.

மாகாண சபை மேலும் பலப்படுத்தப்படும். அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்களை வழங்குவோம். எதிர்காலத்தை இளைஞர்கள் கைகளில் வழங்குவோம்.

06

### நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

# ஹிருணிகாவுக்கு நாளை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நீதிமன்றத்தை அவமதித்தாக குற்றஞ்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, அவரை நாளை (13) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊவா மாகாண முன்னாள் ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த முறைப்பாட்டு மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (11) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த வழக்கு தொடர்பான எதிர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோரினார்.

அதன்படி, நவம்பர் 29ஆம் திகதிக்கு முன் ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை டிசம்பர் 04ஆம் திகதிக்கு மீண்டும் அழைக்க வேண்டும் என உத்தரவிட்டனர். அத்துடன், பிரதிவாதியான ஹிருணிகா பிரேமச்சந்திர, வழக்கு விசாரணை தினத்தன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### கைதிகள் தினம் இன்று

# 359 கைதிகளுக்கு ஜனாதிபதி விசேட பொது மன்னிப்பு



கைதிகள் தினத்தை முன்னிட்டு 04 பெண்கள் உட்பட 359 கைதிகளுக்கு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்று 12 ஆம் திகதி கைதிகள் தினம் என்பதனால், இவ்வாறு 359 பேரும் ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இந்த விடுதலை வழங்கப்பட்டுள்ளது.

அபராதம் செலுத்த தவறிய குற்றச்சாட்டில் கைதுசெய்ப்பட்ட கைதிகளுக்கே இவ்வாறு விடுதலை வழங்கப்பட்டுளள்ளது.

அதன்படி, வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து அதிகளவில் 46 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர். மஹர சிறைச்சாலையிலிருந்து 32 கைதிகளும், களுத்துறை சிறைச்சாலையிலிருந்து 30 கைதிகளும், அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 29 கைதிகளும், வாரியபொல சிறையிலிருந்து 26 கைதிகளும் இன்று (12) விடுதலை செய்யப்படவுள்ளனர்.

### பொருளாதார நெருக்கடியிலிருந்து

# நாட்டை மீட்ட தலைவர் ரணிலுக்கு நன்றிக்கடன் செலுத்த மக்கள் தயார்

### ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

**(நாரம்மலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)**

பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்தமைக்கு நன்றிக் கடனாக நாட்டு மக்கள் 2005 ஆம் ஆண்டு நிபந்தனைகள் எதுவுமின்றி இன, மத பேதங்களைக் கடந்து மஹிந்த ராஜபக் ஷவை ஜனாதிபதியாக்கினர்.

அதேபோன்று, தற்போது நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நாட்டு மக்கள் ஒன்றிணைந்து நன்றிக்கடன் செலுத்த தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, "இயலும் ஸ்ரீலங்கா" மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று முன்தினம் நாரம்மல நகரில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார,

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொது ஜன பெரமுன கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட 37 கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஒன்றாக கைகோர்த்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு மேற்கொண்ட அர்ப்பணிப்புக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையிலேயே நாம் ஒன்றாக இணைந்து அவருக்கு ஆதரவு வழங்குகின்றோம்.

அத்துடன், எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நன்றிக் கடனாக எமது முழுமையான ஆதரவையும் தேர்தலில் வழங்குவோம்.



அந்தவகையில், குருநாகல் மாவட்ட மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுக்கொடுப்பர். வங்குரோத்தடைந்திருந்த நாட்டை பொருளாதாரத்தில் முன்னேற்றி இயல்பு நிலைக்குகொண்டு வந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் உணவுப் பொருட்கள், எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின்றி மக்கள பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டபோது, நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டசந்தர்ப்பத்தில் துணிச்சலுடன் முன்வந்து நாட்டை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க மட்டுமே என அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 12 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்

சுபஹ் - 04.46
லுஹர் - 12.08
அஸர் - 03.14
மஃரிப் - 06.13
இஷா - 07.23

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆவணி 27

ராகுகாலம் : பகல் : 1.33 - 3.00வரை
சுபநேரம் : காலை : 7.33 - 9.03வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



2025 வரவு செலவுத் திட்டத்தில்

# துண்டு விழும் தொகையை நிரப்ப அரசாங்கத்துக்கு இயலுமை உண்டு

## அநுரவின் கொள்கை நாட்டின் அழிவை நோக்கியே கொண்டு செல்லும்

### புத்திஜீவிகள், வர்த்தகர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி



**குருநாகலிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் 1,700 பில்லியன் ரூபாவை நிரப்புவதற்கான இயலுமை அரசாங்கத்துக்கு உண்டு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின்படி எதிர்காலத்தில் நாட்டின் மொத்த செலவு 6,800 பில்லியன் ரூபாவாகவும், வருமானம் 5,100 பில்லியன் ரூபாவாகவும் காணப்படுவதோடு இடைவெளி 1,700 பில்லியன் ரூபாவாகக் காணப்படுவதாகவும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2 வீதமாகும் எனவும் இந்த பற்றாக்குறையை நிரப்பும் இயலுமை தமக்கேவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், அநுரவுடன் தானும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பங்கேற்கும் காணொளி உரையாடலுக்கு நேரத்தை ஒதுக்க முடியும் என தெரிவித்த ஜனாதிபதி, சஜித்தையும் இதற்கு அழைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

குருநாகலில் இடம்பெற்ற புத்திஜீவிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருடனான சந்திப்பின்போது இதனை தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின்படி செயற்பட்டால் நாடு கடன் பெறுவதற்கான அவசியம் குறைவடையும் எனவும் தெரிவித்தார்.

06

## பிள்ளைகளின் எதிர்காலத்தை சிந்தித்து தீர்க்கமான முடிவெடுக்கும் தருணம் இது

### அமைச்சர் டிரான் அலஸ்

**நாரம்மலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



இரண்டு வருடங்களுக்கு முன் நாடு எதிர்கொண்டிருந்த மிக மோசமான நெருக்கடி நிலைக்கு மீண்டும் நாடு செல்வதா? அல்லது நாட்டைப் பாதுகாத்து முன்னேற்றுவதா? என்பது தொடர்பான தீர்மானத்தை நாட்டு மக்கள் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான தருணம் இதுவென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டது. சமையல் எரிவாயு, எரிபொருள், பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இல்லாது மக்கள் பெரும் சிரமப்பட்டனர். வீதிகளில் நாட்கணக்கில் காத்திருந்தனர். அந்த நிலையை மாற்றி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்த ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க மட்டுமே என அவர் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் பயங்கரவாத குழுவொன்றும் செயற்பட்டதாகவும் அக் குழுவினர் ஆர்ப்பாட்டங்களினூடாக பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதாகவும் நாட்டை அராஜக நிலைக்கு உட்படுத்த முயற்சித்ததாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

06

## புத்தளம், சேரக்குளி காட்டுக்குள் 470 Kg மஞ்சள் மூடைகள் மீட்பு



**தினகரன் விஷேட நிருபர்**

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 470 கிலோ அடங்கிய 14 மூடைகளை புத்தளம், சேரக்குளி கடற்பிரதேசத்திலிருந்து கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

06

இஸ்ரேலில் விவசாயத்துறை வேலைவாய்ப்பு

## 69 இளைஞர்களுக்கு விமான பயணசீட்டுக்கள் கையளிப்பு

இஸ்ரேலில் விவசாயத்துறையில் தொழில் வாய்ப்பை பெற்றுச்செல்லும் 69 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (09) விமானப் பயணச்சீட்டுகளை வழங்கியது. இவ்வாறு பயணச்சீட்டுகளை பெற்றுக்கொண்டவர்களில் முதற்கட்ட தொகுதி இன்று 12 ஆம் திகதி இஸ்ரேலுக்கு பயணிக்கின்றனர்.

இஸ்ரேலுக்கும், இலங்கை அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இதுவரை 2,252 இளைஞர்கள், இஸ்ரேலில் விவசாயத்துறையில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

06



ரூ.100 மில். இழப்பீடு கோரி

## திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக ஹரிணி வழக்கு



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், பிரதிவாதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் தனியார் நிறுவனம் ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி மாவனெல்லை பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்ட திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமையும் பட்சத்தில் தலதா பெரஹராவை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்ததாக, முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

பிரதிவாதி தன்னையும் தொடர்புபடுத்தி இந்தக் கருத்தை வெளியிட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, அந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது, தவறானது என கூறியுள்ளார்.

இதன்மூலம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதனால் பிரதிவாதியிடமிருந்து 100 மில்லியன் ரூபா நட்டஈடு அறவிட உத்தரவிடுமாறு மாவட்ட நீதிமன்றத்தில் அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பொலிஸார் விசேட அறிவுறுத்தல்

ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறும், கடுமையான அவதானத்துடன் செயற்படுமாறும் பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

பிரதான வேட்பாளர்கள் கூடும் இடங்களில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோதிலும், வேட்பாளர்கள் மேடைக்குள் நுழையும்போதும், வெளியேறும்போதும் ஆதரவாளர்களால் பாதுகாப்பின்மை நிலவுவது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருளான இடங்களில் கூட்டங்களை நடத்துவதன் மூலம் பாதுகாப்பு தரப்பினர் கடும் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான அறிக்கையை நாளாந்தம் பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல்

## இதுவரை 3,406 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாபக இதுவரை 3,406 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 1,199 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 2,106 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 28 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பாக 73 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கொலம்பியாவிலிருந்து வந்த

## விமான தபால் பொதிகளுள் இரண்டு கிலோ கொக்கெய்ன்

### 02 இளைஞர்கள் கைது



கொலம்பியாவிலிருந்து விமான தபால் சேவை மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த பொதிகளிலிருந்து 2 கிலோ 14 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த போதைப்பொருள், மின் உபகரணங்களுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு பொதிகளாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கணேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொக்கெய்ன் போதைப்பொருளின் சமார் 75 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கைப்பற்றப்பட்ட போதைப்பொருடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 08

## குறள் தரும் சிந்தனை



துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்

எல்லை கடந்து நடந்து கொள்பவர்களின் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்கள் தூய்மையான துறவிகளைப் போன்றவர்கள்.

# தேர்தல் பிரசாரத்தில் முக்கிய இடம்பிடித்துள்ள பொருளாதாரம்

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தல் அடுத்த வார இறுதியில் இடம்பெற உள்ளது. இத்தேர்தலின் நிமித்தம் 39 அபேட்சகர்கள் களமிறங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் கடந்த காலங்களைப் போலல்லாது இம்முறை தேர்தல் பிரசாரத்தில் நாட்டின் பொருளாதாரம் குறித்த விடயமும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இத்தகைய முக்கியத்துவத்தை பொருளாதாரம் கடந்த காலங்களில் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தற்போதைய தேர்தல் காலகட்டத்தில் பொருளாதாரம் குறித்து பேசப்படாத தேர்தல் மேடையே இல்லை என்றளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்று இருக்கிறது. இது ஆரோக்கியமான நிலைமை தான். ஆனால் இந்நிலைமையும், அக்கறையும் தேர்தலின் பின்னரும் தொடர வேண்டும். அது நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்க வேண்டும். நாட்டின் மீது உண்மையான பற்று கொண்டவர்களின் எதிர்பார்ப்பு அதுவாகவே உள்ளது.

ஏனெனில் 2022 ஆம் ஆண்டில் நாடு முகம் கொடுத்த பொருளாதார வீழ்ச்சியும் அதன் விளைவாக நாடும் மக்களும் எதிர்கொண்ட பாதிப்புக்களும் தாக்கங்களும் தான் இத்தகைய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த எதிர்பார்ப்பை தவறாகவோ, பிழையாகவோ நோக்க முடியாது. அவ்வாறான அனுபவத்தையே கடந்த பொருளாதார வீழ்ச்சி நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறது.

அதனால் தேர்தல் காலம் என்பதற்காக கலந்துரையாடிவிட்டு கடந்து செல்லக்கூடிய விவகாரம் அல்ல பொருளாதாரம். தேர்தலின் பின்னரும் அது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்கள் முன் கொண்டு செல்லப்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரம் என்பது தனிநபருக்கும், குடும்பத்துக்கும், சமூகத்திற்கும் மாத்திரமல்லாமல் முழு நாட்டுக்கும் இன்றியமையாததாகும். எந்தவொரு நாட்டினதும் பொருளாதாரம் பலமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். அதன் ஊடாகவே நாடும் மக்களும் பாதிப்புகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாவதைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும்.

அதன் காரணத்தினால் பொருளாதாரத்தை ஒழுங்குமுறையாகவும் சீராகவும் கையாளப்பட வேண்டும். அதனை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய வேண்டும். அதன் நிமித்தம் முறையான திட்டமிடல்களுடனும் தூர நோக்குடனும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போது தான் பொருளாதாரம் உறுதியான பாதையில் முன்னோக்கிப் பயணிக்கக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.

அந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக நாட்டில் ஏற்பட்டிருந்த அனைத்து நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீங்கிட வழிவகை செய்தன. அத்தோடு அந்த வேலைத்திட்டங்கள் பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் முன்னோக்கிப் பயணிப்பதற்கு வழிவகை செய்துள்ளன. அதன் பயனாக நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார பிரதிபலன்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் தற்போதைய தேர்தல் பிரசார காலத்தில் ஓரிரு அபேட்சகர்கள் மேடைக்கு மேடை வழங்கும் வாக்குறுதிகளும் அறிவிப்புகளும் அனைத்தையும் இலவசமாக வழங்கினால் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துவிடும். நாடு அபிவிருத்தி அடைந்துவிடும் என்ற பார்வையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இவை எதுவும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தற்போது நாடு இருக்கும் நிலையில் இத்தகைய அறிவிப்புக்கள் சிறுபிள்ளைத்தனமானவை என்பது தான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். பொருளாதாரம் குறித்த தெளிவான பார்வையும் நோக்கும் கொண்ட எவரும் இவ்வாறு வாக்குறுதிகளையும் அறிவிப்புக்களையும் வழங்கவே மாட்டார்கள். மக்களின் கருத்தும் அதுதான்.

ஏனெனில் அதலபாதாளத்தில் விழுந்திருந்த நாட்டின் பொருளாதாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த வேலைத்திட்டங்களின் பயனாக கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து முன்னோக்கிப் பயணிக்கிறது.

இந்த சூழலில் அனைத்தையும் இலவசமாக வழங்கும் வகையில் வழங்கப்படும் வாக்குறுதிகள் பொருளாதாரத்தைக் கேலிக்கூத்துக்கு உள்ளாக்கிவிடும். அதனால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாவதை எவராலும் தடுக்க முடியாது போய்விடும்.

ஆகவே மக்கள் பொறுப்புடனும் தூர நோக்குடனும் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# கனடாவில் விபுலாநந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு நிகழ்வுகள்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டுதின விழாவும், 77 ஆவது நினைவுதின பரிசளிப்பு விழாவும் கனடாவில் கடந்த சனிக்கிழமை (8)சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்வை கனடா சுவாமி விபுலானந்த கலை மன்றம் அதன் தலைவர் கே.புருஷோத்தமன் தலைமையில் டொரொண்டோவில் சிறப்பாக நடத்தியது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து சென்றிருந்த பேராசிரியர் செல்லையா அருள்மொழி(காரைதீவு) மற்றும் திருமதி சத்தியவதி அருள்மொழி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவில் பிரபல எழுத்தாளர் கே. குமரகுரு வரவேற்புரை நிகழ்த்த,பேராசிரியர் இ.பாலசுந்தரம், மாவிலி மைந்தன் எஸ். சண்முகராஜா (துறவற நூற்றாண்டு) ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பை மன்றச் செயலாளர் நித்தி சிவானந்தராஜா மேற்கொண்டிருந்தார். விபுலானந்த கீதத்தை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவக இசைத்துறை நுண்கலைமாணி திருமதி ஸ்ரீஜெனா தயாபரனும், குழுநடனத்தை ஸ்ரீமதி நிரோஷா சுதேசனின் மாணவிகளும் நிகழ்த்தினர்.

'சுவாமி விபுலாநந்தர்' எனும் தலைப்பில் செல்வி அட்சயா சிவகுகன் காட்சிப்படுத்தலை நிகழ்த்தினார். தமிழமிர்தம் நிகழ்வை செல்வன் அபீஷ்ணன், செல்வி ராகவி, செல்வன் அமுதீசன் ஆகியோர் நிகழ்த்த, நன்றியுரையை செயலாளர் நித்தி சிவானந்தராஜா ஆற்றினார். மன்றம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற 60 மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.







வி.ரி.சகாதேவராஜா...

# ஆபிரிக்க நாடுகளை கடன்பொறியில் சிக்கவைப்பதற்கு முற்படுகிறதா சீனா?

சீனா கடந்த இருபது ஆண்டுகளாக ஆபிரிக்காவுடனான வர்த்தகத்தை பெருமளவில் அதிகரித்துள்ளது. அந்தக் கண்டம் முழுவதும் வீதிகள், ரயில் பாதை மற்றும் துறைமுகங்கள் கட்டுவதற்கு பில்லியன்கணக்கான டொலர்களை செலவிட்டுள்ளது.

இது சீனா _ஆபிரிக்கா ஒத்துழைப்பு மன்றம் (FOCAC) வாயிலாக செயற்படுத்தப்பட்டது. FOCAC என்பது ஆபிரிக்க நாடுகளும் சீனாவும் எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பதைத் தீர்மானிக்க மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மாநாடு.

இந்த ஆண்டுக்கான கூட்டம் பெய்ஜிங்கில் நடைபெற்றது. சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இந்த மாநாட்டில் உரையாற்றினார்.

சமீபத்தில், சீனா தனது அணுகுமுறையை மாற்றிக்கொண்டது. இப்போது அதன் உயர் தொழில்நுட்பம் மற்றும் 'பசுமை பொருளாதாரம்' தயாரிப்புகளை ஆபிரிக்காவிற்கு வழங்குகிறது.

கடந்த இருபது ஆண்டுகளில், ஆபிரிக்காவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாகவும், ஆபிரிக்க நாடுகளில் மிகப்பெரிய முதலீட்டாளராகவும் சீனா மாறியுள்ளது. அத்துடன் ஆபிரிக்காவிற்கு அதிகளவு கடன்களையும் வழங்கியுள்ளது.

சீனா 2022இல் ஆபிரிக்க நாடுகளுடன் 250 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக வர்த்தகம் செய்தது. பெரும்பாலும் எண்ணெய் மற்றும் கனிமங்கள் போன்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்தது. பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்தது.





ஆபிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்காக சீனா கடனளித்தது. தற்போது சீனாவுக்கு அவற்றின் செலுத்தப்படாத கடன் மதிப்பு 134 பில்லியன் டொலர்கள். இது ஆபிரிக்க நாடுகள் உலகின் பிற நாடுகள்/அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களில் சுமார் 20% தொகை ஆகும்.

இருப்பினும், ஆபிரிக்க நாடுகளுக்கு சீனா வழங்கும் கடன் மற்றும் ஆபிரிக்காவில் முதலீடு செய்வதில் சமீபகாலமாக மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், பல ஆபிரிக்க அரசுகள் தங்கள் நாடுகளில் சீனாவால் கட்டமைக்கப்பட்ட உள்கட்டமைப்புக்கான கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.

இன்று வீதிகள், ரயில்வே மற்றும் துறைமுகங்கள் போன்றவற்றுக்கான பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களை ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்குவதில் இருந்து சீனா தனது கவனத்தை மாற்றி, அதற்கு 4ஜி மற்றும் 5ஜி தொலைத் தொடர்பு வலையமைப்புகள், விண்வெளி செயற்கை கோள்கள், சோலார் பேனல்கள் மற்றும் மின்சார வாகனங்கள் போன்றவற்றை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

ஆபிரிக்க சந்தையில் மின்சார வாகனங்களை திணிப்பதாக சீனா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சீனா ஆபிரிக்காவிலிருந்து நன்மை பெறும் விதத்தில் கடன் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அரசாங்கங்களை பெரும் தொகையை கடனாகப் பெற வற்புறுத்துகிறது, பின்னர் அவர்கள் திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்களைத் தொடங்கும் போது அவர்களிடம் சலுகைகளை கோருகிறது என்கிற குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

சீனாவிற்கு அங்கோலா $18 பில்லியன், ஜாம்பியா $10 பில்லியன் மற்றும் கென்யா $6 பில்லியன் கடனை திரும்ப செலுத்த வேண்டியுள்ளது. இவர்கள் அனைவரும் இந்தத் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

# சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மட்டக்களப்பு மாணவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் வசித்து வரும் பொறியியலாளர் சுப்பிரமணியம் மற்றும் மருத்துவர் ஹிசாந்தினி ஆகியோரின் மகளான (ஐந்து வயது, பத்து மாதங்கள்) மாணவி செல்வி. காவ்யஸ்ரீ சோழன் உலகசாதனைப் புத்தகத்தில் சாதனையொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இம்மாணவி மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வரிசைகளைக் கொண்ட 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கு 6 நிமிடங்கள் 50 வினாடிகளில் விடையளித்து சோழன் உலக சாதனை படைத்தார்.

இது தொடர்பான நிகழ்வானது மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள கிரீன் கார்டன் ஹோட்டலில் வைத்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதன் போது தனக்கு வழங்கப்பட்டிருந்த 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கான சரியான பதிலை 6 நிமிடங்கள் 50 வினாடிகளில் எழுதி சோழன் உலக சாதனை படைத்தார் சிறுமி காவ்யஸ்ரீ.

இந்நிகழ்வை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம், பீபல்ஸ் ஹெல்பிங் பீபல்ஸ் பவுண்டேஷன் மற்றும் கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம் போன்ற அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்தன.

சோழன் உலக சாதனை படைத்த சிறுமிக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை போன்றவற்றை வழங்கிப் பாராட்டினார்கள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா, மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் இன்பராசா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட துணைத் தலைவர் வரதகரன் ஆகியோர். இந்த உலக சாதனை நிகழ்வின் முதன்மை விருந்தினராக மன்முனை வடக்கு பிரதேச செயலர் வ.வாசுதேவன் பங்குகொண்ட அதேவேளை, நிகழ்வைத் தலைமேயேற்று நடத்தினார் கதிரவன் த.இன்பராசா.



மண்முனை வடக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆர்.ஜே.பிரபாகரன், இலங்கை UCMAS பணிப்பாளர் திருமதி சித்ரா இளமநாதன், UCMAS ஐச் சேர்ந்த சி.சதீஸ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கு கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் வி. ரஞ்சிதமூர்த்தி, கதிரவன் பட்டிமன்ற பேரவையின் ஆலோசகர் கவிஞர் அன்பழகன் குரூஸ், 'உதவும் கரங்கள்' அமைப்பின் தலைவர் சா. ஜெயராஜா, அகிலன் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் வி. ஆர். மகேந்திரன், சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் கனடிய நாட்டிற்கான தலைவரின் தாயார் திருமதி பேரின்பம் பார்வதி, மட்டக்களப்பு கிரானில் அமைந்துள்ள பீப்பிள்ஸ் ஹெல்பிங் பீப்பிள் பவுண்டேஷன் தொண்டு நிறுவனத்தின் சார்பாக மோசஸ் ஜேசுதாசன், அகிலன் பவுண்டேஷன் லண்டன் அமைப்பின் இணைப்பாளர் கலாநிதி வி. ஆர். மகேந்திரன் ஆகியோர் பங்குபற்றினர். கதிரவன் அமைப்பின் துணைத் தலைவர் சோலையூரான் ஆர். தனுஷ்கரன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சி தொகுப்பாளராக கதிரவன் அமைப்பின் செயலாளர் கவிஞர் அழகு தனு பங்களிப்பு வழங்கினார். ஷர்மிளா சுப்பிரமணியம் நன்றியுரையாற்றினார்.

சோழன் உலக சாதனை படைத்த குழந்தை காவியஸ்ரீயை அனைவரும் வாழ்த்திப் பாராட்டினார்கள்.

செ. திருக்கோணபெருமாள்...

# ரியாத்தில் உலக செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு

கடந்த 10.09.2024 செவ்வாய்க்கிழமையன்று சவுதி அரேபியாவின் ரியாத் நகரில், செயற்கை நுண்ணறிவுக்கான மூன்றாவது சர்வதேச மாநாடு பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் தலைமையில் ஆரம்பமாகியது. இம்மாநாட்டில் 100 நாடுகளிலிருந்து 450 இற்கும் மேற்பட்ட சர்வதேச ஆய்வாளர்கள் பங்கேற்கின்றனர்.

இவ்வுச்சிமாநாடு Global AI Summit தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தைப் பற்றிய முக்கிய கலந்துரையாடல்களைக் கொண்ட உலகளாவிய நிகழ்வாகும். இந்த மாநாட்டை சவூதி அரசின் தகவல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையம் (SDAIA)நடத்துகிறது, மேலும் அரச தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனத் தலைவர்கள் மற்றும் உலகப் புகழ்பெற்ற ஆய்வாளர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

இம்மாநாடு இன்று 12 வரை நடைபெறுகிறது. சவூதி அரேபியாவின் SDAIA மற்றும் பல்வேறு உலகளாவிய நிறுவனங்களின் ஒத்துழைப்பில் மாநாடு நடத்தப்படுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 3000 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர், இதில் அரச அதிகாரிகள், தொழில்துறை தலைவர்கள், மற்றும் கல்வியாளர்கள் அடங்குவர்.

இம்மாநாட்டில் 90 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன, மிக விஷேடமாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், சீனா, பிரான்ஸ், ஐக்கிய அரபு அமீரகங்கள், இந்தியா போன்ற நாடுகள் இந்த உச்சிமாநாட்டில் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன.

Google, Amazon, Microsoft, Tesla போன்ற நிறுவனங்களின் முக்கிய தலைவர்கள், மற்றும் MIT, Stanford போன்ற முன்னணி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானிகள் இதில் பேசுகிறார்கள்.

மொத்தத்தில் 100 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி ஆவணங்கள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. ஆவற்றில் சில வருமாறு:

சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு, போக்குவரத்து மற்றும் நவீன நகரங்கள் மேம்பாட்டில் AI யின் பங்கு, பாதுகாப்பு மற்றும் இராணுவ துறைகளில் AI யின் பயன்பாடு, செயற்கை நுண்ணறிவின் நெறிமுறைகள் மற்றும் தனியுரிமை சிக்கல்கள்.





இம்மாநாட்டில் 50 இற்கும் மேற்பட்ட பணிமனைகள் மற்றும் விவாதங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் பேசப்படும் சில முக்கிய அம்சங்கள்:

தொழில்முனைவோர்கள் மற்றும் புதுமை நிறுவனங்களுக்கு AI தீர்வுகளை உருவாக்குவது செயற்கை நுண்ணறிவின் மூலம் நிலைத்த வளர்ச்சியை எவ்வாறு அடையலாம் என்பதை ஆராய்வது. AI யின் நெறிமுறைகளுக்கான சவால்களை விவாதிப்பது.



உலகளாவிய அளவில் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிக்கான திட்டங்களை இந்த உச்சிமாநாடு அமைக்கும், மேலும் AIயின் நிலையான மற்றும் பாதுகாப்பான பயன்பாடுகளை முன்னேற்ற உதவும். அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பின் மூலம் செயற்கை நுண்ணறிவில் புதிய கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்தும், பல்வேறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்.

உலகளாவிய அளவில் AI இன் பொறுப்பான மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் புதிய கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் வெளியிடல்.

கலாநிதி ஆ.ர்.ஆ அஸ்ஹர்...

### சஜித் அல்லது அனுரவின் எதிர்காலத்தைப் பார்க்காமல்

# உங்களினதும், பிள்ளைகளினதும் எதிர்காலத்தை சிந்தித்து தேர்தலில் எனக்கு ஆதரவு வழங்குங்கள்!




## ஜனாதிபதி கிளிநொச்சியில் தெரிவிப்பு

சஜித்தின் அல்லது அநுரவின் எதிர்காலத்தை அன்றி, தமது மற்றும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து இந்த நாட்டு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி எரிவாயு சிலிண்டருக்காக வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் (10) பிற்பகல் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.





எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பேரணியில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி "பொருளாதார வீழ்ச்சியை அடுத்து மக்கள் படும் துன்பத்தைப் போக்க சஜித்தோ அல்லது அனுரவோ முன்வரவில்லை. உலகெங்கிலும் உள்ள அரச தலைவர்களைச் சந்தித்து உரம், எரிபொருள் கேட்ட போது சஜித்தும் அநுரவும் தேர்தல் நடத்துமாறு கோரியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, மக்களின் வலிக்கு மத்தியில் தேர்தல் நடத்துமாறு கோரியும் வேலைநிறுத்தம் நடத்தியும் நாட்டை சீர்குலைக்க முயன்ற தலைவர்களை நம்ப முடியாது" எனவும் தெரிவித்தார்.

எனவே சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தி அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் கைகோர்க்க வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்களுக்கு சாப்பிட உணவிருக்கவில்லை. சமையல் எரிவாயு, எரிபொருள், மருந்து, உரம் இருக்கவில்லை. பொருளாதாரம் சரிவடைந்திருந்தது. அப்படியொரு தருணத்திலேயே நாட்டை ஏற்றேன். மக்கள் கஷ்டப்படுவதை கண்டு வருந்தினேன்.

கஷ்டங்களில் இருந்து மீண்டு மக்கள் சுமுகமாக வாழ வழி செய்ய வேண்டுமெனக் கருதியே ஆட்சியை ஏற்றுக்கொண்டேன். அனுரவோ சஜித்தோ அரசாங்கத்தை ஏற்க முன்வரவில்லை. மக்களின் வயிற்றுப்பசியை போக்கவோ, தட்டுப்பாடுகளை நிவர்த்திக்கவோ, பிள்ளைகளின் கல்வியை உறுதிப்படுத்தவோ அவர்கள் முன்வரவில்லை.

மக்கள் கஷ்டப்படுவதை வேடிக்கை பார்த்தனர். கஷ்டத்தைப் போக்க உதவி செய்ய வருமாறு கோரினேன். அதையும் மறுத்துவிட்டனர். மக்கள் தட்டுப்பாடுகளுடன் தவித்தபோது, அவர்களுக்கு தேர்தல் தேவைப்பட்டது. தேர்தல் நடத்தியிருந்தால் மக்கள் பிரச்சினைகள் தீர்ந்திருக்குமா? அவர்கள் தேர்தலுக்கு பணத்தை செலவிடச் சொன்னார்கள். அவர்களை என்னோடு இணையுமாறு அழைத்தேன், வரவில்லை. மக்கள் கஷ்டத்தில் அரசியல் இலாபம் தேடினார்கள்.

நான் தட்டுப்பாடுகளை நிவர்த்திக்க வழி செய்தேன். அதனால் தொழில்களை மீள ஆரம்பிக்க முடிந்தது.



எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் மக்களை வாழவைக்கும் முயற்சிகளை எடுத்தோம்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால் பிரச்சினைகள் இன்னும் உள்ளன. மக்களுக்கு சுமைகள் உள்ளன. அவற்றைக் குறைக்க வழி செய்வோம். இன்று சுமுகமான சூழலை உருவாக்கியிருக்கிறோம். ஐ.எம்.எப் மற்றும் 18 நாடுகளின் கடன் உதவிகள் கிடைக்கவுள்ளன. அதனை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். அடுத்த ஐந்து வருடங்களில் அதற்கு வழி செய்வேன். அதற்காகவே மக்கள் ஆணை கேட்கிறேன்.

பொருளாதாரத்தை நிலைப்படுத்தியிருந்தாலும். அது முழுமையாக உறுதியாகவில்லை. அதற்காகவே 'இயலும் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை கொண்டு வந்திருக்கிறேன். ஐந்து அம்சங்களை உள்ளடக்கி அந்தத் திட்டத்தை தயாரித்திருக்கிறோம். ரூபாவை வலுவடையச் செய்வதே மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சிறந்த வழியாகும்.

நவீன விவசாய முறைமைகளுக்குச் செல்ல மக்களுக்கு உதவிகளை வழங்குவோம். மரக்கறி மற்றும் பழங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து விநியோகிக்க தனியாருடன் இணைந்து சந்தைப்படுத்தல் திட்டங்களை அறிமுகப்படுத்துவோம்.

நெல் விளைச்சலையும் பலப்படுத்துவோம். உலக சனத்தொகை அதிகரித்து வரும் வேளையில் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி நாமும் வலுவடைய வேண்டும். இதனால் கிராமங்களில் வறுமை மறையும். இப்பகுதிகளை இலங்கையின் மிகச் சிறந்த விவசாய மையமாக மாற்றுவோம். எமக்கு உதவ மக்கள் முன்வர வேண்டும்.

அதற்காகவே பலாலி சர்வதேச விமான நிலையை மேம்படுத்தினோம். பரந்தன், காங்கேசன்துறை, மாங்குளத்தில் முதலீட்டு வலயங்களை அமைப்போம். சூரியசக்தி மூலம் மின்சார உற்பத்தி செய்வோம். இந்தியாவிற்கு அதனை விற்பனை செய்யவும் முடியும். அதனால் பலருடைய வாழ்க்கை செழிப்படையும். டிஜிட்டல் பொருளாதாரம் உருவாக்கப்படும். கிளிநொச்சி பொறியியல் பீடத்தை சுற்றிலும் அமைந்துள்ள பகுதிகளை மேம்படுத்துவோம்.

என்னுடைய எதிர்காலத்தைப் பற்றியோ சஜித்துடையதோ அனுரவுடையதோ எதிர்காலத்தைப் பற்றியோ சிந்திக்காமல் தத்தமது எதிர்காலத்தையும் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் சிந்தித்து தீர்மானியுங்கள்.

அதைப்பற்றிச் சிந்தித்து சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தவறினால் சிலிண்டரும் இருக்காது. எதிர்காலமும் இருக்காது".

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

**ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா:**

"கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் தவறவிடும் பட்சத்தில் அடுத்த ஐந்து வருடங்கள் அதனை நிவர்த்தி செய்வதற்காக காத்திருக்க வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் சரியான முடிவை எடுக்க வேண்டும். உண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும். அப்போதுதான்கடந்தஇருவருடவளர்ச்சியை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியும். இன்றேல் அதலபாதாளத்தில் நாடு வீழ்ந்து விடும். அதனை உணர்ந்து ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்ய வேண்டும். எங்களை நம்பி உங்கள் வாக்குகளை அளியுங்கள். கட்சி என்ற ரீதியில் அதற்கு நாம் பொறுப்பாக இருப்போம்.

நமது அரசியல் தலைமைகள் தென்னிலங்கை ஆட்சியாளர்களுடன் உறவை வைத்துக் கொண்டு தமது சுயலாபங்களை பெற்ற பின்னர் அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று மக்களை ஏமாற்றுவார்கள். நாம் அவ்வாறு ஒரு போதும் சொல்ல விரும்பவில்லை. நாம் சொல்வதைத்தான் செய்வோம். ஜனாதிபதியின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்."

**பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன்:**

"இன்று மக்களை பலரும் தவறாக திசைதிருப்பிவிட முயற்சிக்கிறார்கள். காணி உறுதிகள் அற்ற மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினாலேயே தீர்வு வழங்க முடியும். சஜித் பிரேமதாச அரைகுறையான வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்து மக்களை நடுத் தெருவில் விட்டுள்ளார்.

மறுமுனையில் அனுரகுமார திசாநாயக்க பற்றி இளையோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தக் கட்சியின் வரலாறு என்னவென்பது மக்களுக்குத் தெரியும். எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே வவுனியா, மன்னார் பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியும்.

அனுரவையோ சஜித்தையோ மக்கள் தெரிவு செய்யும் பட்சத்தில் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கிளிநொச்சி மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்க வழி செய்தார்.

அன்று அரசாங்கத்தை ஒப்படைத்த போது ஏற்காதவர்கள் வீட்டின் நிர்மாணம் முழுமையாக கட்டிய பின்னர் வந்து குடியமரலாம் என்று நினைக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி பல பொய்களைச் சொன்னாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைச் சாத்தியமான விடயங்களை மட்டுமே செய்வார்."

ஈ.பி.டி.பி தலைவர்கள், அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பெருந்திரளானோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### நான் மக்களுக்காக எரிபொருள் மற்றும் உரம் கேட்ட போது சஜித்தும் அனுரவும் தேர்தல் நடத்துமாறு கோரினர்



# ஊழல் ஒழிப்பு வேலைத்திட்ட பங்காளர்களாக இராணுவத்தினரை இணைத்துக் கொள்வோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



ஐக்கிய மக்கள் சக்தியின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பங்காளர்களாக இராணுவத்தினரை இணைத்து இந்த நாட்டை ஊழலில் இருந்து மீட்டெடுக்கின்ற பயணத்தின் முன்னோடிகளாக நியமித்துக் கொள்வோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பநிலையையும் இந்த தீவிரவாத தாக்குதலுக்கு முன்னுரிமை வழங்கிய குழுவையும், அதன் பிரதான சூத்திரதாரியையும் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை பாரபட்சமின்றி முன்னெடுப்போம். எமது நாட்டின் கொடிய நோயாக மாறி இருக்கின்ற போதைப்பொருள் விநியோகத்தை முற்றாக ஒழிப்பதற்கு இராணுவத்தினரின் பூரண பங்களிப்பைப் பெற்றுக் கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ சக்தி நேற்றுமுன்தினம் (10) ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டைப் பாதுகாப்பதற்கும், நாட்டை ஒருமைப்படுத்துவதற்கும் தொடர்ந்து உயிரை துச்சமாக மதித்து தமது கடமைகளை முன்னெடுக்கின்ற முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு படையினர், உள்ளிட்ட இராணுவத்தினர் அரசியல் காலங்களில் அரசியல் கால்பந்துகளாக நடத்தப்படுகின்றனர். தேர்தல் காலங்களில் பல சந்தர்ப்பங்களில் கைவிடப்படுகின்றனர்.

அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவது எதிர்க்கட்சியின் செயற்பாடாக இருக்கின்றது. 21 ஆம் திகதியன்று அந்த செயற்பாட்டிற்கு 220 இலட்சம் மக்களின் ஆசீர்வாதத்தோடு தீர்வினையும் பதிலையும் வழங்குகின்ற காலம் ஆரம்பமாகும். 48 மணித்தியாலத்திற்குள் முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்குவோம். அதன் ஊடாக குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்வினை பெற்றுக் கொடுப்போம்.

இராணுவத்தினரின் நலன்புரி செயற்பாடுகளுக்காக உள்ள இராணுவ அதிகார சபைக்கான சட்ட ரீதியான அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. எனவே இராணுவத்தினருக்காக தனியான திணைக்களம் ஒன்றும் உருவாக்கப்படும். இவர்களுக்கு சமூகத்தில் மேலும் வருமானத்தை பெறக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கி, வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும், தொழில் முனைவோர்களாக மாறுவதற்கும் தேவையான ஆரம்ப மூலதனத்தையும் வழங்குவோம்.

இராணுவ கட்டமைப்புக்குள் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றையும் நிவர்த்தி செய்வோம்.

அக்ரஹார காப்புறுதித் திட்டத்தையும் ஓய்வூதியத்தையும் முறையாக வழங்குவோம். நிலையான வைப்பிற்கான 15 வீத வட்டியை வழங்குவதோடு அதனை அதே நிலையில் செயற்படுத்துவோம். அங்கவீனமடைந்த இராணுவத்தினரின் நலன்புரி விடயங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். கண், கை, கால் உள்ளிட்ட அவயவங்களை இழந்து இரத்தம் சிந்தி, எம்மை பாதுகாத்த இராணுவத்தினர் எம்மால் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் நாம் பெற்றுக் கொடுப்போம்.

அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இராணுவ குடும்பங்களின் பிள்ளைகளுக்கும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் தனியான வேலைத் திட்டங்களை உருவாக்குவோம். யுத்தத்திற்குப் பின்னர் இன மத பேதங்களின்றி அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து இந்தப் பொறுப்புக்களை செயல்படுத்த வேண்டும்".

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அதிவேக வீதிகள் விஸ்தரிப்பு

## ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ

'எமது அரசாங்கத்தில் அதிவேக வீதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் கொண்டுவரப்படும். இதன் மூலம் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடையும். மட்டக்களப்பில் இருந்தும் தலைவர்கள் உருவாக வேண்டும். அதற்கு நான் உதவி செய்வேன்' என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "கிழக்கு மாகாணம் எனது தந்தையின் காலத்திலேயே அதிகமான அபிவிருத்திகளைக் கண்டது. தெற்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளைப் போன்று கிழக்கிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது அரசாங்கத்தில் அதிவேக வீதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் கொண்டு வரப்படும் என நான் உறுதியளிக்கின்றேன். இதன் மூலம் கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை அபிவிருத்தி அடையும். இங்குள்ள விவசாயம், மீன்பிடிக் கைத்தொழில் ஏற்றுமதிக்கு உலக சந்தையில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

எங்களுக்குத் தேவை இந்த நாட்டை அபிவிருத்தியுடைய நாட்டாக மாற்ற வேண்டும் என்பதேயாகும். இங்குள்ள இளைஞர்களுக்கு பலமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இங்குள்ள அரசியல்வாதிகள் இன, மத ரீதியான பணிகளையே முன்னெடுத்து வருகின்றனர். இம்மக்களுக்கான நல்லதொரு எதிர்காலத்தை என்னால் வழங்க முடியும் என உறுதி கூறுகின்றேன்.

இலங்கையிலுள்ள கலாசாரங்களைப் பற்றியோ, இங்குள்ள இளைஞர் யுவதிகளைப் பற்றியோ எவருமே சிந்திப்பதில்லை. இலங்கையிலுள்ள கலாசாரங்களை பௌத்த கலாசாரத்துக்கு சமனாக கிழக்கு மாகாண கலாசாரங்களையும் என்னால் பாதுகாக்க முடியும் என உறுதி என உறுதி கூறுகின்றேன்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இங்குள்ள இளைஞர்கள் ஏமாற்றப்படுகின்றனர். இதற்கான நிரந்தரத் தீர்வை என்னால் பெற்றுத்தர முடியும். கடந்த காலங்களில் மக்கள் கஷ்டத்தைக் கடந்து வந்துள்ளனர். இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் இனவாதம், மதவாதம் அதிகரிக்கின்றது. பிரிவினை அரசியலை நான் முன்னெடுப்பதில்லை. நான் முடியுமானவற்றை மட்டுமே கூறுவேன்.

உங்களுடைய திறமைகளைப் பாவித்து வெளிநாடுகளைப் போல் வியாபாரம் மற்றும் விவசாயத்தில் முன்னேற்றமடைந்து தொழில்நுட்பத்துடன் கூறிய அறிவைப் பெற்று பொருளாதார முன்னேற்றம் காணுமாறு நான் அழைப்பு விடுகிறேன். இந்தத் தேர்தலில் புதிய தலைவர்கள் உருவாக வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மட்டக்களப்பில் இருந்தும் தலைவர்கள் உருவாக வேண்டும். அதற்கு நான் உதவி செய்வேன். சிந்தனையுடைய இளைஞர்களை உங்களது எதிர்காலத்தை திட்டமிட அழைப்பு விடுக்கிறேன்". இவ்வாறு நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பூமியை நோக்கி வரும் இராட்சத விண்கோள்

## 15ஆம் திகதி பூமியை கடந்துச்செல்லும் நாசா எச்சரிக்கை



பயங்கர வேகத்தில் வந்துக்கொண்டிருக்கும், 2024 ON என்ற இராட்சத சிறுகோள், எதிர்வரும் 15ஆம் திகதி பூமிக்கருகில் வரவுள்ளதாக நாசா எச்சரித்துள்ளது.

720 அடி விட்டம் கொண்ட இந்த இராட்சத சிறுகோள், இரண்டு கிரிக்கெட் மைதானங்களை விடவும் பெரிதாக இருக்கமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பிரம்மாண்டமான விண் கற்பாறை எதிர்வரும் 15ஆம் திகதி பூமிக்கருகில் பயணிக்கவுள்ளது.

இருப்பினும், இந்த சிறுகோள் சுமார் 620,000 மைல்கள் அல்லது 2.6 மடங்கு பாதுகாப்பான தூரத்தை பராமரிக்குமென கூறப்பட்டுள்ளது. இதன் 25,000 மைல் வேகம் வானியியலாளர்கள் மற்றும் விண்வெளி ஆர்வலர்களை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாசாவின் பூமிக்கருகிலுள்ள பொருள் கண்காணிப்பு திட்டத்தால் முதலில் அடையாளம் காணப்பட்ட இந்த இராட்சத சிறுகோளான 2024 ON, அதன் ஈர்க்கக்கூடிய அளவு மற்றும் விரைவான வேகம் காரணமாக கவனத்தை ஈர்த்துள்ளது.

கலிபோர்னியாவின் பசடேனாவில் (Pasadena) உள்ள ஜெட் ப்ராபல்ஷன் ஆய்வகம் (The Jet Propulsion Laboratory), மேம்பட்ட ரேடார் மற்றும் ஆப்டிகல் தொலைநோக்கி கருவிகளைப் பயன்படுத்தி சிறுகோளைக் கண்காணித்து வருகிறது. சிறுகோளின் அளவு, வடிவம் மற்றும் கலவை பற்றிய விரிவான பகுப்பாய்வுகள், ஏதேனும் சாத்தியமான அபாயங்களை மதிப்பிடுவதற்கும் உத்திகளை ஆராய்வதற்கும் நடத்தப்படுகின்றன.

சிறுகோளின் கலவையை ஆய்வு செய்ய ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி (ESA) உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களுடனான ஆலோசனை நடந்து வருகிறது. NASA, ESA மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் விண்வெளி ஆய்வு மற்றும் கிரக பாதுகாப்பில் உலகளாவிய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

நாசா தனது இணையதளம் மற்றும் சமூக ஊடக தளங்களில் இதுதொடர்பான புதுப்பிப்புகளை வெளியிட்டு, பொதுமக்களுக்கு தகவல் அளித்து வருகிறது. வட அரைக்கோளத்தில்(Northern Hemisphere) உள்ள ஆர்வலர்கள், விர்ச்சுவல் டெலஸ்கோப் வாயிலாக வழங்கப்படும் நேரடி ஒளிபரப்பு மூலம் சிறுகோளின் அணுகுமுறையை காண முடியும் என நாசா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிபதியை அவமதிக்கும் வகையில் சுவரொட்டிகள்; மூவர் கைது

கொழும்பு மற்றும் புற நகர்களில், மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியான எம்.எம்.எம்.மிஹாலை அவமதிக்கும் வகையில், சுவரொட்டிகளை ஒட்டிய தனியார் பஸ் சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து, ஒரு கார், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரும் மற்றும் கைது செய்யப்படவுள்ள முக்கிய நபரொருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்து மன்னார் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான, சுவரொட்டிகளை ஒட்டவேண்டிய இடங்களை அடையாளம் காட்டியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி கோட்டை புகையிரத நிலையத்துக்கருகாமையிலும், சுங்கப் பிரிவுக்கு அருகாமையிலும், புதுக்கடை மேல் நீதிமன்றத்துக்கு அருகாமையிலும், பெலவத்தை, பத்தரமுல்லை மற்றும் கல்கிஸ்ஸை போன்ற மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில், மேல் நீதிமன்ற நீதிபதி அவமதிக்கும் வகையில் பல சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 400g ஹெரோயினுடன் கைதான நபர் ஒருவருக்கு மரண தண்டனை

## கண்டி மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

*கண்டி, யட்டிநுவர வீதியில் 400 கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.*

*கல்பிஹில்ல, அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் (10) செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.*

*இந்நபர் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி வேன் ஒன்றில் ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டுசென்றச்போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.*




# இன்றைய பலன்கள்

## (12.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**

*மாணவ மாணவிகளுக்கு படிப்பில் அக்கறை கூடும். பெண்களுக்கு சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் பணியாற்றும் நிலை உருவாகும். குடும்பத்தில் சுபகாரிய பேச்சு முடிவாகும்.*

**ரிஷபம் :**

*மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். கலைஞர்களுக்கு வருமானம் உயரும். மாணவ மாணவிகளுக்கு கல்வி முன்னேற்றம் உண்டு.*

**மிதுனம்:**

*பெண்களில் சிலர் அசாத்திய துணிச்சலுடன் சில காரியங்களை செய்து பாராட்டு பெறுவீர்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.*

**கடகம்:**

*மாணவ மாணவிகள் எதிர்கால கல்வி சம்பந்தமாக முக்கிய முடிவு எடுக்கும் சூழ்நிலை உருவாகும். தம்பதியினருக்குள் ஒற்றுமை மேலோங்கும் .*

**சிம்மம்:**

*மாணவ மாணவிகளுக்கு கல்வியில் எதிர்பார்த்த வெற்றி உண்டு. பெண்களுக்கு உறவினர்களால் நன்மை கிடைக்கும். உங்கள் பெயரிலே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.*

**கன்னி:**

*மாணவ மாணவிகள் எதிர்பார்த்த இலக்கை அடைவர். பெண்களுக்கு குடும்பச் சுமை கூடும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.*

**துலாம்:**

*பெண்களுக்கு விரயம் அதிகரிக்கும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பால் கூட்டு முயற்சிகள் வெற்றி காண்பீர்கள்.*

**விருச்சிகம்:**

*பெண்களுக்கு வருமானம் திருப்தி தரும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.*

**தனுசு:**

*மாணவ மாணவிகளுக்கு பெற்றோரின் ஆதரவு உண்டு. பெண்களுக்கு குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.*

**மகரம்:**

*கலைஞர்களுக்கு கௌரவம் அந்தஸ்த்து உயரும். மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர்களின் ஆதரவு திருப்தி தரும். பெண்களுக்கு வரன்கள் வாசல் தேடி வரும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள்.*

**கும்பம்:**

*பெண்களுக்கு நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும். அவ்வப்போது வரும் ஆரோக்கிய தொல்லைகள் மனதை வாட்டும்.*

**மீனம்:**

*பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.*

## தனியார் துறையினரது...

வழங்கவேண்டுமென அமைச்சு தெரிவிக்கின்றது. அதன்படி, ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக்கொடைத்தொகை ஆகியவற்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், தனியார் துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் 01.01.2016 ஆம் திகதி முதல் தேசிய குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் தொடக்கத்தில், மாத சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் 10,000 ரூபாவாகவும், தினக்கூலி தொழிலாளர்களுக்கு 400 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது. மீண்டும் 2021 ஆம் ஆண்டில், இந்த சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் மூலம், ஒகஸ்ட் 2021 முதல் குறைந்தபட்ச மாத சம்பளம் 12,500 ரூபாவாகவும், தினசரி சம்பளம் 500 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அண்மைய பொருளாதார நெருக்கடியுடன், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக, 2021 ஆம் ஆண்டிலிருந்து தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தில் அதிகரிப்பு இல்லையென தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் பல தடவைகள் கலந்துரையாடிய பின்னர், தேசிய குறைந்தபட்ச சம்பளம் 12,500 ரூபாவிலிருந்து 17,500 ரூபாவாக 5,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச சம்பளத்தை 500 ரூபாவிலிருந்து 700 ரூபாயாக 200 ரூபாவால் உயர்த்தும் நோக்கத்துடன் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் திருத்தம் செய்ய பாராளுமன்றத்தில் சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி, உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றி, இந்த திருத்த வரைவு 03.09.2024 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சபாநாயகரால் மேற்படி வரைவில் கையொப்பமிட்டதன் பின்னர் இம்மாதம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திசைகாட்டியின் முறையான...

தான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, அநுரவும், தானும், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பங்கேற்கும் காணொளி உரையாடலுக்கு நேரத்தை ஒதுக்க முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க, யாருக்கும் பேசுவதற்கு இடமளிக்காது பேசக்கூடிய சஜித்தையும் இதற்கு அழைக்கலாம் எனவும் கூறினார.

குருநாகல், அஸ்லியா கோல்டன் கிரசென்டா ஹோட்டலில் நேற்று முன்தினம் (10) பிற்பகல் நடைபெற்ற குருநாகல் மாவட்ட அறிஞர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினருடான கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

8,900 பில்லியன் ரூபாய் செலவும், 4,900 பில்லியன் ரூபாய் வருமானமும், 4,000 பில்லியன் ரூபாய் பற்றாக்குறையும் கொண்ட நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் கொள்கைப் பிரகடனத்தை அநுர குமார திசாநாயக்க ஏன் தனது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டுள்ளார்? எனவும் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, மேடைகளில் பொய்க்கூச்சல் எழுப்பாது, தமது சரியான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும் எனவும் வலியுத்தியுள்ளார்.

இதன்போது, மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு, உரம் இன்றி நாட்டு மக்கள் தவிக்கும்போது, சஜித்துக்கும் அநுரவுக்கும் வருத்தமும் வேதனையும் ஏற்படவில்லையா? மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோனவில்லையா? அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இன்று நான் இங்கு இருந்திருக்க மாட்டேன். அவர்கள் தமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத காரணத்தினாலேயே, ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க நேர்ந்தது.

எனக்குப் பல அரசியல் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக்கொண்டு வந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ பதவி விலகும்போது சபாநாயகரை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்து தேர்தலுக்குச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? அதிகார இடைவெளியை உருவாக்கியிருந்தால் இன்று பங்களாதேஷ் இருக்கும் நிலையலேயே நாமும் இருந்திருக்க வேண்டுமென ஜனாதிபதி மேலும்தெரிவித்தார்.

## பிரதான சூத்திரதாரிகளுக்கு...

தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை (11) காலை கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பேராயரிடம் வாக்குறுதியளித்தார்.

## ஓவல் மைதானத்துக்கு முன்னால்...

இடையிலான மூன்றாவது டெஸ்ட் கடந்த 09 ஆம் திகதி ஓவல் மைதானத்தில் நடைபெற்றபோது, புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்காக, இலங்கையின் கிரிக்கெட் அணியை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடைசெய்யவேண்டும் என வலியுறுத்தி, விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடி போன்றவற்றுடன் அவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயத்தை பிரிட்டனின் உள்துறை அமைச்சின் கவனத்துக்க கொண்டு வந்துள்ளதாக பிரிட்டனுக்கான இலங்கை தூதுவர் ரோஹித போகொல்லாஹம தெரிவித்துள்ளார்.

## கடன் மறுசீரமைப்பு தொடர்பாக...

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவினால் கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடிப்படை புரிதல் குறித்து இலங்கை பிணை முறி உரிமையாளர்கள் ஆச்சரியத்தை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இலங்கை பிணைமுறி உரிமையாளர்கள், தமது கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல்வேறு தரப்புகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இதில், தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கு கடன் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கைகளில் புரிதல் இல்லை என அவர்கள் கூறியதாகவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

## ஊழியர்களின் தேசிய...

வாக்கெடுப்பின்றி, திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024ஆம் ஆண்டு 48ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச சம்பள (திருத்தச்) சட்டமாக அறியப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கெஹலிய 07 மாதங்களின்...

தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, கெஹலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை மனு கோரல் கடந்த 07 மாதகாலமாக விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று (11) குறித்த பிணை மனுகோரல் விசாரணைக்கு எடுத்ததுக்கொள்ளப்பட்டபோது, கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட மூவருக்கும் நீதிமன்றம் பிணையில் செல்ல உத்தரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சகல தேர்தல் விஞ்ஞாபனங்களையும்...

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார். தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்கான விசேட குழு, ஏனைய தேர்தல் விஞ்ஞாபனங்களையும் மீண்டும் ஆராயவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், இத்தீர்மானம் குறித்து கட்சியின் உறுப்பினர்கள் சிலர் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார். தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்கான விசேட குழு, ஏனைய தேர்தல் விஞ்ஞாபனங்களையும் மீண்டும் ஆராயவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், இத்தீர்மானம் குறித்து கட்சியின் உறுப்பினர்கள் சிலர் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இத்தகைய குழறுபடிகளுக்கு மத்தியில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்கள் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களை நன்கு ஆராய்ந்து, அவற்றின் உள்ளடக்கங்களின் அடிப்படையில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கும் நோக்கில், தமிழரசுக் கட்சியினால் கடந்த மாதம் நிறுவப்பட்ட விசேட குழு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை(10) வவுனியாவில் கூடியது.

தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், சி.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் உள்ளடங்கும் இக் குழுவில், சரவணபவன் தவிர்ந்த ஏனைய ஐவரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட சிறிதரன்,

கடந்த முதலாம் திகதி கட்சியின் மத்திய குழு கூடிய வேளையில், ஜனாதிபதி வேட்பாளர்களின் சிலரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை எனவும், தற்போது அவை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அவற்றையும் நன்கு ஆராய்ந்ததன் பின்னர் யாருக்கு ஆதரவளிப்பது என்பது பற்றி இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## நாட்டில் வன்முறையை தூண்டும்...

அமைப்பு IODPP Police என்ற பெயரில் யூடியூப் சேனலை நடத்தும் அஜித் தர்மபாலவுக்கு எதிராக இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் நேற்று (11) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## நாட்டில் கொள்கை ரீதியான...

"இந்த மோசமான அரசியல் சூதாட்டத்தை நிறுத்தவேண்டும். இலங்கை அரசியலில் இதுவரை என்ன நடந்தது? தேர்தல் வரும்போது அங்கும் இங்கும் கட்சித் தாவுகிறார்கள். இதில் என்ன அரசியல் இருக்கிறது? இதுபோன்ற இவ்வளவு அசிங்கமான, வெட்கக்கேடான அரசியல் வேறெங்கும் இல்லை. சஜித்தின் மேடையிலும், ரணிலின் மேடையிலும் என்ன நடக்கிறது என்று பாருங்கள். கொள்கை ரீதியாகயிருப்பது தேசிய மக்கள் சக்தி மட்டுமே.

யார் நல்லவர்? யார் கெட்டவர்? என்பதை மட்டும் தேர்ந்தெடுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், செப்டம்பர் 21 திகதியன்று நாங்கள் வெற்றி பெறுவோம்" என தெரிவித்தார்.

## அடுத்து பத்து வருடங்களுக்குள்...

தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, மேலும் தெரிவிக்கையில், உங்கள் பிள்ளைகள் கடவுச்சீட்டு பெறுவதற்காக வரிசையில் நிற்காமல், அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற இளைஞர்கள் வரிசையில் நிற்கும் காலகட்டம் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கும் வேளையில், உண்மையான வரிசையை அகற்றும் அளவுக்கு நமது நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றி வருகிறோம்.மோசடி மற்றும் ஊழலை இந்த மேடையில் இருந்து நாங்கள் அகற்றுவோம் என அவர் தெரிவித்தார்.

## துண்டு விழும் தொகையை... (03ஆம் பக்க தொடர்ச்சி)

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

அநுரகுமார திசாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், 8,900 பில்லியன் ரூபா செலவும், 4,900 பில்லியன் ரூபா வருமானமும், 4,000 பில்லியன் ரூபா பற்றாக்குறையும் கொண்ட நாட்டின் பொருளாதாரத்தை அழிவுக்கு கொண்டு செல்லும் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்.

## புத்தளம், சேரக்குளி...(03ஆம் பக்க தொடர்ச்சி)

இக் கடற்பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட சில உரமூடைகளை வட மேற்கு கடற்படையினர் சோதனை சோதனை செய்தபோது, இந்த உரமூடைகளில் உலர்ந்த மஞ்சள் இருந்தமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட 14 உர மூடைகளில் 470 கிலோ கட்டி மஞ்சள் காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## பிள்ளைகளின் எதிர்காலத்த...(03ஆம் பக்க தொடர்ச்சி)

அத்தகைய சூழலில் இந்த நாட்டை பொறுப்பேற்க எவரும் முன்வராத நிலையில், நாட்டையும் மக்களையும் பொறுப்பேற்று அனைத்து வன்முறைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக் கொடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது என அமைச்சர் தெரிவித்தார். 'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று முன்தினம் (10) நாரம்மலையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

## 69 இளைஞர்களுக்கு...(03ஆம் பக்க தொடர்ச்சி)

இவ் ஒப்பந்தத்தின் கீழ், 05 வருடங்கள் 05 மாத காலத்துக்கு அவர்கள் இஸ்ரேலில் பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கை அரசு சார்பாக, இஸ்ரேலிய தொழில்வாய்ப்புகளுக்கு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினூடாக அனுப்பப்படும் பணியாட்கள், இஸ்ரேலிய பீபா நிறுவனத்தின் லொட்டரி முறையில் தேர்வு செய்யப்படுகின்றனர். விமான பயணச்சீட்டுக்களைப்பெற்ற இளைஞர்களின் முதற்கட்ட தொகுதி இன்று 12 ஆம் திகதி புறப்படுகிறது. இரண்டாவது தொகுதி எதிர்வரும்18 ஆம் திகதி இஸ்ரேலுக்கு பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கின் அபிவிருத்திக்கான...(02ஆம் பக்க தொடர்ச்சி)

நாம் நம்பிக்கை பெற்றால் நாட்டையும் இந்த பிரதேசத்தையும் கட்டி எழுப்ப முடியும். அதேபோன்று இளைஞர் யுதிகளுக்கு நல்ல நம்பிக்கையை ஊட்டினால் இன்னும் 20 வருடங்களில் நாம் சிறந்த பொருளாதார முன்னேற்றமடைந்த நாட்டை உருவாக்க முடியும்.

தற்போது ஐந்து வயதிலுள்ள பிள்ளைகள் 20,25 வயதாகும்போது சிறந்த நாடொன்றில் வாழ்வதற்கான நிலையை ஏற்படுத்துவோம். சிறந்த எதிர்காலத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பெற்றுத் தருவதற்காகவே நான் உங்கள் முன் உங்கள் ஆதரவை கேட்டு வந்துள்ளேன். இம்முறை தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க போன்றவர்கள் நாட்டு மக்களுக்கு எதையும் செய்யப் போவதில்லை. வெறும் வாக்குறுதிகள் மட்டுமே அவர்களால் வழங்க முடியும். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் இந்த நாடு வங்குரோத்து நிலையையே அடையும். அவர்களால் நாட்டு மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது. நாட்டு மக்கள் முன்னேற வேண்டுமாயின் அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே எமது எதிர்பார்ப்பு. நாம் மக்களுக்காக ஆரம்பித்துள்ள வேலைத் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உங்கள் ஆதரவை எனக்கு வழங்குங்கள். எதிர்வரும் 21 ஆம் திகதி வாக்களித்து இந்த நாட்டை முன்னேற்றுவதில் பங்காளியாகுங்கள் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## 'துலாவ' நிகழ்ச்சியில்...

பிரதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## இராஜாங்க அமைச்சராக...

அதிரடியாக நீக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வெற்றிடத்துக்கே வைத்திய கலாநிதி சீதாஅரம்பேபொல ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கொழும்பில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு








கடந்த 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற மாபெரும் விருது வழங்கும் நிகழ்வில் இந்திய முன்னணி நடிகை மீனா சாஹர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் இலங்கை கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஒப்பனை கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என சுமார் 200 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

# சுவாச நோய் பிரச்சினைகளை எதிர்த்து போராட ஒன்று கூடிய உலக வல்லுநர்கள்

(றிஸ்வான் சேகுமுஹைதீன்)



உலகெங்கிலும் உள்ள சுவாச சுகாதார நிபுணர்கள் இந்நோய் தாகத்திற்கு எதிரான தங்கள் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் வகையிலும், ஆசிய பிராந்தியத்தில் சுவாச நோய்களின் பாதிப்புகளை குறைத்திட நடத்தப்பட்டு வரும் ஆராய்ச்சி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தும் வகையிலும் அண்மையில் கொழும்பில் மாநாடொன்றில் ஒன்றுகூடினர்.

சுவாச ஆரோக்கியத்திற்கான NIHR குளோபல் ஹெல்த் ரிசெர்ச் யூனிட்டின் (RESPIRE) வருடாந்த விஞ்ஞான மாநாடு அண்மையில் இடம்பெற்றது.

மேலும் 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சிப் பிரிவானது, இலங்கை மருத்துவ சங்கம், இலங்கை நுரையீரல் நிபுணர்கள் கல்லூரி மற்றும் இலங்கை பல்கலைக்கழகங்களின் சுகாதார பீடங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

பிராந்தியத்தில் சிறந்த சுவாச ஆரோக்கியத்தை உறுதி செய்யும் முகமாக ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள் இங்கு தங்கள் ஆய்வுகளின் சமீபத்திய விடயங்களை தெரியப்படுத்தியதோடு உலகளாவிய சுவாச ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக வழிகளைப் பற்றி கலந்துரையாடினர்.

2017 ஆம் ஆண்டில் இலங்கை மருத்துவமனை இறப்புகளில் நாட்பட்ட சுவாச நோய்கள் (CRD) மற்றும் நியூமோனியா ஆகியவை இரண்டும் அதிக எண்ணிக்கையிலான (18%) மரணங்களுக்கு காரணமாய் அமைந்துள்ளன.

கடந்த தசாப்தத்தில் விகிதாசார இறப்பு தரவுகளின் ஒப்பீடுகள், இந்த இரண்டு வகையான நோய்களினால் மருத்துவமனையில் இறப்புகள் அதிகரித்து செல்லும் போக்கின் தன்மையை வெளிப்படுத்துகின்றன. நாட்பட்ட சுவாச நோய்களில், ஆஸ்துமா மற்றும் நாட்பட்ட நுரையீரல் நோய் (COPD) ஆகிய இரண்டு வகையான நோய்களே அதிக நோய்த் தாக்கத்தையும் இறப்பையும் ஏற்படுத்தும் பிரதான நோய்களாக அமைகின்றன. குழந்தை பருவத்தினர் பாடசாலை செல்லாதிருப்பதற்கு மூச்சுத்திணறல் ஓர் முக்கிய காரணமாக இருப்பதோடு பெரியவர்களில் ஆஸ்துமா மற்றும் COPD முறையே 11% மற்றும் 10.5% எனும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

நுரையீரல் புற்றுநோய் உட்பட பல சுவாச நோய்களின் அதிகரிப்புக்கு அசுத்தமான காற்றின் தன்மையே காரணம் என்று கூறப்படுகிறது. நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்துவரும் மோட்டார் வாகனங்களின் பாவனையானது, நாடு முழுவதும் சுற்றுப்புற சூழலின் காற்றின் தரம் குறைவடைந்தமையுடன் தொடர்புபட்டதாக அமைகிறது.

நகரங்களில் வெளிப்புற காற்று அசுத்தமடைதல் ஒரு முக்கிய விடயமாக இருப்பதைப் போலவே, கிராமப்புற சமூகங்களில் காற்றோட்டம் இல்லாத சமையலறைகளில் உணவு சமைக்க விறகுகள் பயன்படுத்தப்படுவது உட்சூழல் காற்று அசுத்தமடைதலுக்கான ஒரு அச்சுறுத்தும் காரணியாக அமைகிறது. புகைப்பிடிக்கும் பழக்கமற்ற கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த பெண்களிடையே சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையினால் நாட்டப்பட்ட மூச்சுத்திணறல் நோயானது ஏற்படுவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

அசுத்தவாயுக்களை சுவாசிப்பதன் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சுகாதார விளைவுகள் பற்றிய ஆய்வை கொழும்பு மற்றும் கண்டி ஆகிய இரண்டு முக்கிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவர்கள் வளி மாசடைதல் மற்றும் புகையிலைப் பயன்பாடு பற்றி நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களை ஆராய்ந்து, இதில் காணப்படும் குறைபாடுகளை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை ஆய்வாளர்கள் கண்டறிவார்கள்.


**வரையறுக்கப்பட்ட ஹங்குரங்கெத்த பலநோக்குக் கூட்டுறவு சங்கம்**

**மீட்கப்படாத அடகுப் பொருட்களின் ஏலவிற்பனை**

தங்க நகை ஈடுவைக்கப்பாளர்களாகிய வ/ப ஹங்குரங்கெத்த பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின்,

1. ஹங்குரங்கெத்த நகர கிராமிய வங்கி
2. கரலியத்த கிராமிய வங்கி
3. உனன்தென்ன கிராமிய வங்கி
4. கலஉட கிராமிய வங்கி
5. அதிகாரிகம கிராமிய வங்கி
6. உடவத்த கிராமிய வங்கி

என்ற கிளைகளில் 2023.06.30 வரை அடகு வைக்கப்பட்டுள்ள ஒரு வருடம் தாண்டிய எனினும் மீட்கப்படாத அடகுத்தங்க நகைகள் 2024.09.28ம் திகதி ஹங்குரங்கெத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தின் கூட்ட மண்டபத்தில் மு.ப.10.00 இற்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இவ் அடகுப் பொருட்கள் 2024.09.27 மு.ப.11.00 வரை மீட்டுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

**ஏல விற்பனை செய்யப்படும் தினம் - 2024.09.28**

**பொது முகாமையாளர்,**
**வ/ப ஹங்குரங்கெத்த ப.நோ.கூ.சங்கம்**
**ஹங்குரங்கெத்த**
**081-2369375**
**2024.09.05**


# புத்தளத்தில் இரத்ததான முகாம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் குழுவினரான 2003 க.பொ.த. (சா/த) குழுவினரான "சஹீரியன்ஸ் ட்யூட்ஸ்" அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் எதிர்வரும் சனிக்கிழமை (14) காலை 8.30 இல் இருந்து புத்தளம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் அண்மையிலே புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதனை கருத்தில் கொண்டே இந்த பழைய மாணவர் சங்கம் இரத்த தான நிகழ்வுதனை உடனடியாக ஏற்பாடு செய்துள்ளது.

பெண்களும் இரத்தம் தானம் செய்வதற்கான விரிவான பிரத்தியேகமான இட அமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய் 2024.09.10 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 5592 | ரூ. 26,149,304.00 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| M | 9 | 8 | 0 | 0 | 9 | 9 |

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 167

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| M | 0 | 0 | 9 | 9 |

**கொவிசெத**

| சீட்டிழுப்பு இலக்கம் | சீட்டிழுப்பு திகதி | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|
| 3834 | 2024.09.10 | ரூ. 61,926,713.20 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | விசேட எழுத்து | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| P | 28 | 34 | 36 | 44 | P | 24689 |

**Mega POWER**

| சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | | அடுத்த மெகா சுப்பர் பரிசு |
|---|---|---|---|
| 1940 | 2024.09.10 | 86249 | ரூ. 445,671,834.00 |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| T | 06 | 18 | 22 | 28 | 76 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 VIP** — திகதி 2024.09.10, சீட்டிழுப்பு இலக்கம் 418

| ஆங்கில எழுத்து | L7 எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| H | H | 2 | 4 | 0 | 0 | 6 | 7 |

அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 35,488,460.48

**ராசி சுப பலன்**

| திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு |
|---|---|---|
| 2024.09.10 | 901 | ரூ. 3,021,100.00 |

| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | தனயோக இலக்கம் | நாளுக்கான விதி எண் |
|---|---|---|---|---|---|---|
| விருச்சிகம் | 06 | 08 | 39 | 49 | 25256 | 26 |

**தன நிதானய**

| சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|
| 1622 | 2024.09.10 | ரூ. 111,244,739.44 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | விசேட எழுத்து | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| H | 32 | 54 | 60 | 67 | H | 01914 |


TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

25th anniversary

**மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் 2023**

தேசிய பத்திரிகையொன்றில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் தமது ஆக்கங்கள், கேலிச் சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் பிரசுரமான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 என்ற அடிப்படையில் பத்திரிகையிலிருந்து வெட்டப்பட்ட தமது ஆக்கங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் புகைப்படங்களின் பகுதிகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட அசல் விடயதானங்களைப் பெறுவது சாத்தியமற்றிருப்பின் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சபை உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பக் கோரப்படுகிறது.

சுயாதீன நடுவர்கள் குழுவொன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கான பிரிவுகளுக்காக அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்ட கியூ.ஆர். குறியீட்டை ஊடுருவல் செய்யவும். மேலதிக தகவல்களுக்கு www.slpi.lk அல்லது www.pccsl.lk க்கு பிரவேசிக்க வேண்டும்.

**விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 30, 2024 ஆகும்.**

அனைத்து விடயதானங்களும் சரியான முறையில் கோப்பாக்கம் செய்யப்பட்டு (தளர்வான கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அவைத் தலைவர், அதிசிறந்த ஊடகவியல் விருதுகள் 2023, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பேர்னார்ட் சொய்ஸா மாவத்தை (கிருள்ள வீதி), கொழும்பு 5 என்ற முகவரியில் கையளிக்கப்பட வேண்டும்.

# வடக்கின் உதயம்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி கின்னஸ் உலக சாதனை

**(கோப்பாய் குறூப் நிருபர்)**



யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழ் இப்போட்டியில் இவர் சாதனை படைத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி முடித்தே குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கடந்த மே மாதம் 20 திகதி கொடிகாமத்து வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

மூன்று மாதங்களின் பின் world guiness assesment commity மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கின்னஸ் சாதனைக்கான விண்ணப்பம் முதல் அனைத்து விடயங்களையும் மாணவியே தனது சுய முயற்சியில் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கின்னஸ் சாதனை படைத்த மாணவியை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைத்து சாதனை சான்றிதழையும் பார்வையிட்டு பாராட்டியிருந்தார்.

## நல்லூர் திருவிழாவில் தவறவிடப்பட்ட பொருட்கள் யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைப்பு

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட இன்னமும் உரிமை கோரப்படாத பொருட்கள் யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைச்சங்கிலி 1, மோதிரம் 1, பணப்பைகள் 9, கைக்கடிகாரங்கள் 18, தேசிய அடையாள அட்டைகள் 4, சாரதி அனுமதிப் பத்திரம் 4, வங்கி அட்டைகள் 4, திறப்புகள் 39 ஆகிய பொருட்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டன.

இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களை காட்டி மாநகர சபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் நேற்று தொடக்கம் ஒக்டோபர் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பாரதியார் நினைவு தினம் அனுஷ்டிப்பு





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதன் ஒன்றுகூடலின் போது பாரதியார் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆசிரிய மாணவி க.விஜிதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக விரிவுரையாளர் உதயலதா நவதீசன், பாரதியாரின் பல்பரிமாணம் என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி சப்னா, பாரதியாரின் கவிதைத்திறன் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

கலாசாலை பிரதி அதிபர் க.செந்தில்குமரன் நிறைவுரையாற்றினார்.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட திருமதி உதயலதா நவதீசன் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

## ரயில் மோதி பெண் பலி

**(வவுனியா விசேட நிருபர்)**

ஓமந்தையில் ரயில் மோதி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். யாழிலிருந்து வவுனியா நோக்கி நேற்றுமுன்தினம் மாலை சென்ற ரயிலே புளியங்குளம் பகுதியை கடந்து ஓமந்தையை நோக்கி சென்ற போது ரயில் தண்டவாளத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த பெண் மீது மோதியுள்ளது.

இதில், சம்பவ இடத்திலேயே குறித்த பெண் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் சுமார் 35 -45 வயது மதிக்கத்தக்கவர் என தெரியவருகின்றது. இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லையென ஓமந்தைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## டிப்பர் வாகனம் மோதி பாடசாலை மாணவி உயிரிழப்பு

**(நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)**

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியால் சைக்கிளில் தனியார் கல்வி நிலையம் சென்ற மாணவி டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

பாலசிங்கம் விடுதி அருகாமை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கொக்குவில் இந்து கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவியான விதுஷா விஜயகுமார் என்னும் 17 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (10) பிற்பகல் 2:40 மணியளவில் வீதியில் மாணவி சென்றுக்கொண்டிருந்த போது டிப்பர் வாகனமொன்று அவரை மோதியுள்ளது. இதில் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் புதுக்குடியிருப்பில் கைது

**(ஓமந்தை விசேட நிருபர்)**

புதுக்குடியிருப்பு கைவேலி பாடசாலையில் மின்விசிறி திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் கடந்த மாதம் 16 ஆம் திகதி 4 மின் விசிறிகள் திருடப்பட்டிருந்தன. இதனையடுத்து பாடசாலை சமூகத்தினரால் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து நேற்று முன்தினம் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய கைவேலி முதலாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்,

மின்விசிறிகளை திருடி இருநபர்களுக்கு தலா 3000 ரூபாவுக்கு விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து மின்விசிறிகளை வாங்கிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சந்தேகநபர், பொருட்களை விற்று அதிலிருக்கும் பணத்தை போதைப்பொருளுக்கு பயன்படுத்தி வந்தமை தெரியவந்துள்ளது.



# மலைச்சாரல்



## ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக போலி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன

### ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது போலி பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி பல வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தற்போது அவை அனைத்திலிருந்தும் விடுபட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேர்தல் பிரசார மேடைகளில் இன்று பலரும் நாட்டின் திருடர்களை கண்டுபிடித்து சட்டத்துக்கு முன் நிறுத்துவதாக பிரசாரம் செய்து வருகின்றனர். கடந்த நல்லாட்சி காலத்திலும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர்களே இன்றும் அதை முன்னெடுத்து வருகின்றனர். இதனை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கடந்த ஆட்சி காலத்தில் ராஜபக்ச குடும்பத்தினர் மீது போலி பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி பல வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. இருப்பினும் அனைத்து வழக்குகளிலிருந்தும் நாம் இன்று விடுபட்டுள்ளோம். இவர்கள் சுயநலத்துக்காகவே செயற்பட்டார்கள்.

நாட்டின் வேலையற்ற இளைஞர் யுவதிகளின் தொழில் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு பத்தாண்டு வேலைத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்று தருவதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## நாலக பண்டார கோட்டேகொட எம்.பிக்கு மரண அச்சுறுத்தல்

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொடவுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து கூச்சலிட்ட நபர்களுக்கு எதிராக வில்கமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடும் நாமல் ராஜபக்ஷ வை ஆதரித்து லக்கல, ஹெட்டிபொல நகரில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தேர்தல் பிரசார கூட்டத்திற்கு மது போதையில் வந்த நபர்கள் சிலர் அங்கு உரையாற்றிக் கொண்டிருந்த நாலக பண்டார கோட்டேகொட எம்.பிக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து கூச்சலிட்டுள்ளனர். இதனால் அவர் தமது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வில்கமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





டென்மார்க் நாட்டைச் சேர்ந்த அருள்மிகு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் நிதி அனுசரணையில் நுவரெலியா பிரதேச சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.தியாகு ஊடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை மாணவர்களின் மேசை நாற்காலிகள் திருத்தம் செய்யப்பட்டு பாவனைக்காக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸிடம் கையளிக்கப்பட்டன.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## ஜமீலாவுக்கு தேசிய மட்டத்தில் முதலிடம்



**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

அகில இலங்கை ரீதியாக கல்வி அமைச்சு நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார (நஷீத்) கபோட்அச்சியில் மாவனல்லை ஸாஹிராக் கல்லூரி மாணவி எம்.எம்.எம். ஜமீலா தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இதன்மூலம் இவர் தனது பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் தனக்குரிய சான்றிதழ் மற்றும் பதக்கத்தை அண்மையில் பெற்றுக் கொண்டார்.

### கந்தப்பளையில்

## அதிபர் அடித்ததில் 7 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

**(நானுஓயா நிருபர்)**

கந்தப்பளையில் அதிபர் அடித்ததில் 7 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதிபரை இடமாற்றம் செய்யக் கோரி பெற்றோர் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

கந்தப்பளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 07 மாணவர்கள் அதிபரின் தாக்குதலால் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாணவர்களின் பெற்றோர் ராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர்.



அத்துடன் நுவரெலியா வலயக் கல்வி காரியாலயத்துக்கு பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்ய கோரியும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

எனினும் உரிய தீர்வு கிடைக்காத காரணத்தால் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கையில்,

கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி கருத்தரங்குக்கு செல்லாத ஏழு மாணவர்களை பிரம்பால் அதிபர் தாக்கியதாகவும் இதனால் மாணவர்களுக்கு நடக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி பெற்றோரை அழைத்து தகாத வார்த்தைகளால் பேசுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். எனவே தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத்திறன் அற்றவர் ,உடனடியாக அவரை மாற்றி புதிய அதிபரை நியமிக்க கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பதுளை மாவட்டத்திலுள்ள முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், தோட்ட கமிட்டி தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களை சந்தித்து கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

# நகர்வலம்



# தே.ம.சக்தி மக்களை ஏமாற்றாமல் நாட்டுக்கு சரியான கொள்கையை வெளிப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய மக்கள் சக்தியின் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் மீண்டும் நாடு வீழ்ச்சியடைவதுடன் நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியையே எதிர்நோக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களை ஏமாற்றாமல் அநுர குமார திசாநாயக்க அவரது தெளிவான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என சவால் விடுத்த ஜனாதிபதி, தாம் எழுப்பும் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்காமல் தொடர்ந்தும் நாட்டு மக்களை ஏமாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் கொள்கையை தாம் விசேட பொருளாதார நிபுணர்களின் பார்வைக்கு உட்படுத்தியதாக தெரிவித்த ஜனாதிபதி, அதன்படி எதிர்வரும் வருடத்திற்கான செலவு 8.9 ட்ரில்லியன் என்றும் வருமானம் 4.9 ட்ரில்லியன் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, 4 ட்ரில்லியன் ரூபா துண்டு விழுவதை எவ்வாறு குறை நிரப்பு செய்வது? என்றும் அவர் கேள்வி யெழுப்பினார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் ரிக்கிலகஸ்கடையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எவரும் கூறுவது போல் நான் ராஜபக்சக்களை பாதுகாத்திருந்தால் அவர்கள் இந்த தருணத்தில் என்னை விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் மருந்து, உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இல்லாது கஷ்டப்பட்டபோது இந்த நாட்டை பொறுப்பேற்றுள்ள தாம், நாட்டு மக்களை வாழ வைப்பதற்கான அடிப்படை பொறுப்பை நிறைவேற்றுவது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.




நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை தாம் ஏற்று அதற்கான திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், இயலும் ஸ்ரீலங்கா நாட்டை கட்டி எழுப்பக்கூடிய வேலைத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு மக்கள் ஆணை தமக்கு இம்முறை தேர்தலில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டில் நாடு பொருளாதார நெருக்கடியில் காணப்பட்டபோது நான் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். குறிப்பாக அனுர குமார திசாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரிடம் உதவி கேட்டேன். அவர்கள் அதனை ஏற்காமல் என்னை வீழ்த்தி விட்டு செல்ல முற்பட்டனர்.

நாம் ஏற்படுத்திய நாட்டின் இயல்பு நிலையை பாதுகாக்கவே மீண்டும் போட்டியிடுகின்றேன். அன்று நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி முற்றாகச் சரிந்து கிடந்தது. அன்று விவசாயிகளுக்கு உரம் தேவைப்பட்டது. அதனைப் பெற்றுக்கொடுக்க வழி செய்தேன். சுற்றலாறுவைப் பலப்படுத்தினோம்.

மக்களுக்கு உணவு வழங்குவதற்காக எவரும் என்னைத் தூற்றினால் அதனை நான் மறுக்காமல் ஏற்பேன். நான் ராஜபக்சக்களை பாதுகாத்திருந்தால் அவர்கள் என்னை விட்டு சென்றிருக்க மாட்டார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## மாவனல்லை ஸாஹிரா மாணவிக்கு முதலிடம்



அகில இலங்கை ரீதியாக கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார "நஷீத்" போட்டியில் மாவனல்லை ஸாஹிராக் கல்லூரி மாணவி எம்.எம். எம். ஜமீலா தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று தனக்குரிய சான்றிதழைப் பெற்றுக் கொண்டார் .

இவர் வலய மட்டத்திலும் மாவட்ட, மாகாண மட்டங்களிலும் போட்டியிட்டு முதலிடங்களைப் பெற்றதோடு, தேசிய மட்டத்திலும் முதலிடத்தைப் பெற்று, கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என அனைவரும் பாராட்டியுள்ளனர்.

## அல் ஹிக்மாவில் விளையாட்டு நிகழ்வு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் அண்மையில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பாலர் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை எஸ்.ஏ.ஜீனியா நஸ்லின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நேகம்பகா அரச வைத்தியசாலை வைத்தியர் மிப்ராஸ் இஸ்மாயில் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் எச்.ராஜி ஜனுல் ஹக் கலந்து கொண்டார். பாலர் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை எஸ்.ஏ. ஜீனியா நஸ்லின் 27 வருட காலமாக தன்னலம் பாராது ஆற்றும் சேவையை பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

## பெருகமலை ஸாக்கிரீன் மத்ரஸா மாணவிகள் முதலாம் இடம்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை, சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா மாணவிகளான ரஹ்மா இஹ்ஸான், ஹுஸைனா நவ்மான், ஸம்ஹா மர்யம் முனாஸ் ஆகியோர் கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டியில் கஸீதா போட்டி பிரிவில் முதலாம் இடத்தை பெற்றுள்ளனர்

சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் தேசிய மகளிர் கல்லூரி சார்பில் இந்த மூவரும் கோட்ட மட்ட , வலய மட்ட , மாகாண மட்ட போட்டிகளிலும் பங்கு பற்றி முதலாம் இடத்தை பெற்று மேற்படி குர்ஆன் மத்ரசாவுக்கும் பாடசாலைக்கும் புகழ் சேர்த்து உள்ளதாக குர்ஆன் மத்ரசா அதிபர் மௌலவி எஸ் எச் எம் இம்ரான் (ஹுமைதி) தெரிவித்தார்

கஸீதா போட்டியில் வெற்றி பெற்ற மூன்று மாணவர்களும் மத்ரசாவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டினதோ, முஸ்லிம்களினதோ நலன்களுக்காக ஹக்கீம், ரிசாட் முடிவெடுக்க தவறியுள்ளனர்

### ஸ்ரீ லங்கா சமத்துவ முன்னணியின் செயலாளர் இப்ரான்ஷா பௌமி

நாட்டின் பொருளாதார நலன்களையோ முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக்கள், அபிலாஷைகளையோ கருத்தில் கொள்ளாது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுத்தீனும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர் என்று ஸ்ரீ லங்கா சமத்துவ முன்னணியின் செயலாளர் இப்ரான்ஷா பௌமி தெரிவித்துள்ளார்.

2022 இல் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானதால் முஸ்லிம்கள் உட்பட எல்லா மக்களும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார்கள். அந்த சூழலில் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவென எதிர்க்கட்சி தலைவரோ, ஹக்கீம், ரிசாட்டோ முன்வரவில்லை. அவர்கள் மக்கள் அனுபவித்த துன்பங்களை கண்டு இன்பங்கண்டார்கள்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி துணிந்து தீர்மானம் எடுத்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டெடுத்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'மறைந்த தலைவர் அஷ்ரபின் புகைப்படங்களையும் காணொளிகளையும் வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கிழக்கு முஸ்லிம்களை ஹக்கீமும் ரிஷாட்டும் இனியும் ஏமாற்ற முடியாது. இவர்களின் பித்தலாட்டங்களும் அரசியல் வியாபாரங்களும் முஸ்லிம் மக்களுக்கு நன்கு தெரிந்த விடயங்களாகும்.

இவர்கள் அமைச்சு பதவிகளை பெறும் நோக்கத்தில் தான் உடன்படிக்கைகள் செய்து கொண்டுள்ளனர். இவர்களது இத்தகைய செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்திற்கு மாத்திரமன்றி, இலங்கையின் பொருளாதார சீரழிவுக்கும் காரணமாக அமையக்கூடியதாகும்.

அதனால் கிழக்கு வாழ் முஸ்லிம்கள் நாட்டின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு நாம் முகம் கொடுத்த போது எமக்காக தீர்மானங்களை எடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். நாட்டில் மீண்டும் வரிசையுகம் ஏற்பட இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இத்தாலிய பெண்ணை துன்புறுத்திய தேரர் மீது பொலிஸில் முறைப்பாடு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இத்தாலிய பெண் ஒருவரை பலவந்தமாக காரில் ஏற்ற முயற்சித்த தேரர் ஒருவர் மீது அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் அநுராதபுரம் பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றுக்கு சென்றுள்ளார். இதன் போது அங்கிருந்த தேரர் இத்தாலியப் பெண்ணிடம் சென்று கதைத்த பின்னர் அப்பெண்ணின் வட்ஸ்அப் இலக்கத்தை பெற்றுக் கொண்டு அங்கிருந்து சென்றுள்ளார். பின்னர் சிறிது நேரம் சென்றதன் பின்பு இத்தாலிய பெண்ணின் வட்ஸ்அப் இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தன்னை சந்திப்பதற்கு வருமாறு கூறியுள்ளார். இதற்கு மறுப்புத் தெரிவித்த பெண் தனது ஹோட்டல் நோக்கி நடந்து சென்று கொண்டிருக்கும் போது காரில் சென்ற தேரர், குறித்த பெண்ணை காரில் ஏறுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன் பின்னர் காரின் சாரதியும் காரில் ஏறுமாறு அச்சுறுத்திய நிலையில் இத்தாலியப் பெண் அருகிலிருந்த கடை ஒன்றிற்குள் தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஆயிஷா ஹபீப் அறக்கட்டளையின் முக்கிய நிகழ்வு

**ருஸைக் பாரூக்**

ஆயிஷா ஹபீப் அறக்கட்டளை மற்றும் Perfect Software Technology பிரைவட் லிமிடெட் உடன் இணைந்து 1000 பாடசாலை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் ஆயிஷா ஹபீப் அறக்கட்டளையின் தலைவர் சட்டத்தரணி ருஷ்டி ஹபீப் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் புத்திஜீவிகள், அரசியல்பிரமுகர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## வெலிகமவில் நல்லிணக்க கிரிக்கட் சுற்றுப்போட்டி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம கல்பொக்கை G. P. L நிறுவனத்தினால் 11 வது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 15, 16, 17ஆம் திகதிகளில் வெலிகம அறபா தேசிய பாடசாலை பதியுத்தீன் மஹ்மூத் விளையாட்டுத் திடலில் வெகு விமர்சையாக இடம் பெறவுள்ளது. ஒற்றுமை, புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, போன்ற நற்பண்புகளை தனக்குள்ளே வளர்த்துக் கொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டிகளில் இளைஞர்கள் மட்டுமல்லாது வயது வந்த மூத்தோர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இறுதி நாள் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாக இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தில்ஷான் மதுஷங்க கலந்து கொள்கிறார். இந் நிகழ்வில் ஊருக்கு சேவை செய்து ஓய்வு பெற்றுள்ள சுமார் 15 பேர் நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதோடு, க.பொ.த.உயர் தரம், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் 5ம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பெருமை சேர்த்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## 470 கிலோ கிராம் மஞ்சள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் சேரக்குளி கடற்பிரதேசத்தில் இருந்து ஒருதொகை மஞ்சள் (10) கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன. வடமேற்கு கடற்படைக் கட்டளையின் விரைவான நடவடிக்கை கடற்படைப் படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த சில உரமூடைகளை சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, குறித்த காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட 14 உர மூடைகளில் இருந்து 470 கிலோ கிராம் மஞ்சள் காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வலம்புரி கவிதா வட்டத்தின்

## 104 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 104 ஆவது கவியரங்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி (17/09/2024) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் வாழைத்தோட்டம் எம். வஸீர் கவியரங்கிற்கு தலைமைத் தாங்குவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

## எதிர்க்கட்சித்தலைவரின் தேர்தல் விஞ்ஞாபனம் கையளிப்பு



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை களுத்துறை மாவட்டம் பண்டாரகம தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் நயனக ரன்வல்ல களுத்துறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் பஹ்ஜியை அட்டுலுகம ஜாமிஆ இனாமுல் ஹஸன் மத்ரஸாவில் சந்தித்து அண்மையில் கையளித்து வைத்தார்.

இந்த சினேகபூர்வமான சந்திப்பில் அட்டுலுகம பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## கொழும்பு மாவட்ட அஹதிய்யா சம்மேளன புதிய நிர்வாகிகள் தெரிவு



**கொழும்பு தினகரன், கிண்ணியா தினகரன் நிருபர்கள்**

கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் 14வது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை ஹில் காசல் பிளேசில் அமைந்துள்ள காசல் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அகில இலங்கை அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவர் எம்.ஆர்.எம். ஸரூக் கலந்து கொண்டார். அஹதிய்யா பாடசாலைகளின் நிர்வாகிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெருமளவில் பங்குபற்றிய 14வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் பெண்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன் பொது புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

சட்டத்தரணி எம். அஷ்ரப் ரூமி கொழும்பு மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக எம். றிஸ்வான் அன்ஸார், செயலாளராக அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன், உப செயலாளராக இர்ஷாத் ரஸாக் பட்டேல், பொருளாளராக அஸாத் ஷாக், உப பொருளாளராக எம். ஏ.அப்துல்லாஹ், கணக்காய்வாளராக ஏ.எச்.எம். கஸ்ஸாலியும் தெரிவு செய்யப்பட்டதாக கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் ஊடகப் பொறுப்பாளர் ஏ.எச். எம். நஸார் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



சர்வதேச தற்கொலை தினத்தை முன்னிட்டு

# மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் தற்கொலையை தடுப்பதற்கான கலந்துரையாடல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

சர்வதேச தற்கொலை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் அரச மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகளுடன் வருங்காலத்தில் தற்கொலைகளை தடுப்பதற்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆர். முரளிஸ்வரன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் (10) இடம் பெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவின் அடிப்படையில் இளம் பராயத்தினரின் மத்தியில் தற்கொலை அதிகரித்து வரும் நிலையில் இதனை தடுப்பதற்கான விழிப்புணர்வு செயல் திட்டம் மட்டக்களப்பில் இடம் பெற்றது.

கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 170 தற்கொலை மரணங்களும் இவ்வருட காலாண்டில் 70 தற்கொலை மரணங்களும் பதிவாகியுள்ளன.

இளம் பராயத்தினரின் தற்கொலை மரணத்தை தடுப்பதற்கான முற்தடுப்பு கலந்துரையாடல் துறைசார் நிபுணர்களுடன் இடம் பெற்றதுடன் எதிர் காலத்தில் தற்கொலை முற்தடுப்பு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலையில் இடை விலகல், குடும்ப பிரச்சினைகள், பொருளாதாரப் போராட்டங்கள், போதைப்பொருள் பாவனை, துஷ்பிரயோகம், மன அழுத்தம் இது போன்ற பல காரணிகள் தற்கொலைக்கான காரணிகளாக அமைவதாக இங்கு சுட்டிக்காட்டப் பட்டது. பாடசாலை மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு தெளிவூட்டல் மூலம் மாணவர்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்ற முடியும் என இதன் போது கருத்துரை வழங்கப் பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## தே.ம.சக்தி வேட்பாளர் நாளை அக்கரைப்பற்று விஜயம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கலந்து கொள்ளும் “வளமான நாடு அழகான வாழ்க்கை” எனும் கருப்பொருளை மையமாகக் கொண்ட தேர்தல் பிரசார கூட்டம் நாளை (13) அக்கரைப்பற்றில் நடைபெறும்.

கட்சியின் அக்கரைப்பற்று கிளை ஏற்பாடு செய்துள்ள இம்மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கட்சியின் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் இடம் பெற வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவிடம் குகதாசன் எம்.பி எடுத்துரைப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான கள நிலவரங்கள் தொடர்பான சந்திப் பொன்றுதிருகோணமலையில்உள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட பணிமனையில் (09) இடம்பெற்றது. குறித்த சந்திப்பு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர் மைக்கல் பீட்டர்ஸ் மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஆகியோருக்கு இடையில் இடம் பெற்றது. நீதியான தேர்தல், தேர்தல் வன்முறை சம்பவங்கள், தற்கால அரசியல் நிலவரங்கள் தொடர்பான பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்று இடம் பெறவேண்டும் தொடர்பாக இங்கு உரிய கண்காணிப்பு குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினரால் மேலும் எடுத்துரைக்கப்பட்டது.



## மட்டக்களப்பு மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ செவ்வாய்க்கிழமை (10) மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்

தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக விஜயம் செய்த அவர், மட்டக்களப்பு கல்லடியில் தனியார் விடுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் பொது மக்கள் சிலர் அங்கு வருகை தந்திருந்தனர்.

அவர்கள் மத்தியில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உரையாற்றினார்.





மட்டக்களப்பு மாவட்டத்தில்

# புற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கான விசேட திட்டம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புற்றுநோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கான செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் பாதிப்பை கட்டுப்படுத்த முடியும்.

அடுத்து வரும் வருடங்களில், மட்டக்களப்பில் புற்று நோய்க்கான விசேட சிகிச்சை மையம் ஒன்றை நிறுவுவது, பயிற்சியளிக்கப்பட்ட சுகாதார சேவை பணியாளர்கள் குழுமம் ஒன்றை உருவாக்கி, நோய்த்தடுப்பு, பராமரிப்பு மற்றும் நோய்பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றை மக்களின் காலடிகளுக்கு கொண்டு செல்வது, அறக்கட்டளைகளை ஒருங்கிணைத்து அவற்றின் மூலமான உதவிகளை பயன்மிக்க தாக்குவது என்பவை உட்பட குறுங்காலத்தில் ஆற்றப்பட வேண்டிய அவசர சேவைகளை பலவற்றை உள்ளடக்கியதாக இவ் செயற்திட்டத்திற்கான ஆதரவை அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்பட அழைக்கின்றோமென, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஆர். முரளீஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புற்றுநோய்த்தடுப்பு முன்மொழிவுகளுக்கான ஆலோசனைக் கூட்டமென்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். ஆர். முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.



இங்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையானது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம் ஆகியவற்றுடன் இணைந்து புற்றுநோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகைளுக்கான விசேட செயற்திட்டம் ஒன்றை ஒருங்கிணைப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர். முரளீஸ்வரன் ஆலோசனைக்கு அமைவான இவ் முன்னெடுப்புக்களினை தொற்றா நோய்ப்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர். இ.உதயகுமார் மேற்கொண்டு வருகின்றார்.

## நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை



அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

எழுத்தாணி பவுண்டேஷன் நிறுவனத்தால் இளைஞர்கள் மத்தியில் முன்னெடுத்துவரும் மத சுதந்திரம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை கடந்த சனிக்கிழமை திருகோணமலை மல்லிகா விடுதியில் இடம் பெற்றது.

இப் பயிற்சிப் பட்டறையில் 24 இளைஞர்கள் கலந்து கொண்டனர். எழுத்தாணி பவுண்டேஷன் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார் மற்றும் திட்ட ஆலோசகர் வே.காண்டீபன் ஆகியோருடன் NCEASL அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

## காரைதீவில் "நமக்காக நாம்" தமிழ் பொது வேட்பாளருக்கு பெரு வரவேற்பு

காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவில் "நமக்காக நாம்" ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு (10) செவ்வாய்க்கிழமை பகல் பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்பின்னர் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடும் இடம் பெற்றது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திருமதி சின்னையா ஜெயராணி உள்ளிட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் அவரை வரவேற்றனர். நமக்காக நாம்" தமிழ் பொது வேட்பாளருக்காக கிராமங்கள் தோறும் நடைபெறுகின்ற தேர்தல் பரப்புரை செயற்பாட்டில் தமிழ் பொது வேட்பாளர் அறியநேத்திரன் கலந்து கொண்டார். அவருடன் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.



தமிழ் மக்கள் பொதுச்சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் சமூக நலன் விரும்பிகள், சமூக நல அமைப்புகளும் கைகோர்த்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று முதல் அறுகம்பே வரை 100 கி.மீ விழிப்புணர்வு சைக்கிள் பயணம்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

ஊழலற்ற வளமான நாடு என்ற தொனிப்பொருளில் அக்கரைப்பற்று முதல் அறுகம்பே வரை 100 கிலோ மீற்றர் விழிப்புணர்வு சைக்கிள் பயணம் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றிலுள்ள எகேபீ நியூஸ் அமைப்பினரான சில இளைஞர்கள் மேற்கொண்டிருந்தனர்.

சன்ரைஸ் கழகமும் வோக்கேர்ஸ் அமைப்பினரும் அனுசரணை வழங்கிய இந்த விழிப்புணர்வு சைக்கிள் பயணம் அக்கரைப்பற்று மணிக்கூண்டு கோபுரச் சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் ஆரம்பமானது.

ஸ்ரீ லங்கா தேசியக்கொடியுடன் இந்த சைக்கிள் சவாரியை மேற்கொண்ட இளைஞர்கள் திருக்கோவில், சங்கமன்கண்டி, கோமாரி, பொத்துவில், அறுகம்பை போன்ற இடங்களில் தரித்து நின்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினர். அமைப்பின் தலைவர் இர்பான் யூசுப் லெப்பே ஊழலற்ற வளமான நாடு ஒன்றை உருவாக்குவதன் அவசியம் பற்றியும் இன மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை தோற்றுவிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். வெகுவரைவில் இதுபோன்ற மற்றொரு நிகழ்வு ஒன்றை மிகவும் பரந்தளவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் எகேபீ நியூஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.



## அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நிந்தவூர், அட்டப்பளம், காரைதீவு, பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, இறக்காமம், சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலேயே யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியில் இரவு வேளையில் யானைக் கூட்டம் நடமாடுவதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்குள் நிந்தவூர் மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் யானை தாக்கியதால் மூன்று நபர்கள் இறந்துள்ளன. ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர் எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## சஜித் பிரேமதாசவை ஆதரித்து அக்கரைப்பற்றில் பிரசாரம் முன்னெடுப்பு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவினை ஆதரித்து அக்கரைப்பற்று நகர்ப் பகுதியில் பல்வேறு தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம் தலைமையில் பிரசார கூட்டங்கள், மக்கள் சந்திப்புகள் ஆகியன இடம் பெற்று வருவதுடன் தேர்தல் விஞ்ஞாபனம், துண்டுப் பிரசுரங்கள் போன்றனவும் விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

# ரணில் உடல்தகுதியுடன், அனுரகுமார ஓய்வில்!

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க அண்மையில் சுகவீனமுற்றார். அதனால், அவர் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் இருந்து ஒருநாள் ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியதுடன், அனுர குணமடைய பிரார்த்தித்ததோடு, அனுரவிடம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க அவர் விரைவில் குணமடைவார் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ளதால் அரசியல் களமும் சூடுபிடித்துள்ளது. ஆனால், அனுரவின் சுகவீனம் தொடர்பான விஷேட நிலைமையொன்றை சமூகவலைத்தளத்தில் அவதானித்தேன். அவரை எதிர்த்தவர்கள் கூட அவர் விரைவில் குணமடைய வாழ்த்தினார்கள். அவரது எதிர்ப்பாளர்களின் சமூக வலைதளங்களில் கூட இத்தகைய பதிவுகள் காணப்பட்டன.

இருப்பினும் சிலர் கூறிய ஒரு கருத்து பலரது கவனத்தை ஈர்த்தது என நினைக்கிறேன்.

"அனுர ஓய்வில் இருந்த போது ரணில் உடல் தகுதியுடன் இருந்தார்" என ஒரு பதிவில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், ரணில் விக்கிரமசிங்க நல்ல ஆரோக்கியத்துடன் செயற்படுவதாக பலரும் பாராட்டியுள்ளனர். நோய்வாய்ப்பட்டிருப்பது கவலைக்கு ஒரு காரணம். அப்படி இருந்தும் ரணிலின் வயது பொருத்தமற்றது என வர்ணிக்க முயல்பவர்கள் உண்மைகளை தெளிவாக பார்த்திருப்பார்கள் என நினைக்கலாம்.

நரேந்திர மோடி இந்தியாவை சாமர்த்தியமாக ஆட்சி செய்து கொண்டிருந்தபோதும், பல்வேறு செயற்பாடுகளின் மூலம் உலக அரசியலில் ட்ரம்ப் புரட்சியாளராக இருந்தபோதும் அவர்களுக்கு வயது ஒரு தடையாக இருக்கவில்லை. ஆனால் ரணிலின் வயது அவர்களுக்குப் பிரச்சினையாகி விட்டது.



அனுரவின் சுகவீனம் தொடர்பில் சமூகவலைத் தளங்களில் வெளியாகும் எதிர்வினைகளை ஒரு விசேட நிலையாகவே நான் பார்க்கிறேன். கடந்த காலங்களில் அரசியல் போட்டியாளர்களுக்கு பிரச்சினை, நோய் அல்லது விபத்து ஏற்பட்ட போது சமூக ஊடக வலைப்பின்னல்களில் காணப்பட்ட எதிர்வினைகளின் நினைவுகளிலிருந்து...

சனத் நிசாந்தவின் மரணம் அண்மைக் காலமாக மறக்க முடியாத நிகழ்வு. அந்த மரணத்தில் அவருடைய எதிரிகள் எப்படி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் பார்த்தோம். யாரோ ஒருவரின் துரதிர்ஷ்டத்தில் மகிழ்ச்சியடையும் கலாசாரம் நம்மிடம் இல்லை. எதிரியிடம் கருணை காட்டுவதும், இயன்றால் உதவி செய்வதும், துன்பத்தில் இருக்கும் போது அவருக்கு அனுதாபம் காட்டுவதும் பண்பாட்டின் மகத்தான பண்புகளாகும்.

## பழைமைக்கும் நவீனத்துக்கும் இடையிலான வேறுபாடு

மரணத்தில் மகிழ்ச்சியடையும் மற்றும் பகிரங்கமாக துவேசத்தை வெளிபடுத்தும் பண்பற்ற செயல் காணப்பட்டது முதன்முதலில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் மறைவிலாகும்.

நெடுஞ்சாலைகளில் பாற்சோறு சமைத்து சிலர் எப்படி மகிழ்ந்தனர் என்பது பற்றிய தகவல்கள் பகிரங்கமானவை.

எவ்வாறாயினும், ஒருவரின் துரதிர்ஷ்டம் அல்லது மரணத்தில் அளவிட முடியாத இன்பத்தை அனுபவிக்கும் வெறுக்கத்தக்க பழக்கம் சமீபகாலமாக அதிகமாகி விட்டதாகத் தோன்றுகிறது. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி தொடர்பான சமூக ஊடகங்களில் நிலைமையை தெளிவாக காணமுடிகிறது. கலைஞர் ஜாக்சன் ஆண்டனி மருத்துவமனையில் இருந்தபோதும் அவர் இறந்த பிறகும் சிலரின் எதிர்வினைகள் மிகவும் சோகமான அனுபவம்.

## விக்டர் ஐவன் முன்வைத்துள்ள எதிர்வுகூறல்!

இவையனைத்தும் சமீபகால அனுபவங்கள் என்பதால், மனிதநேயமற்ற மனிதர்கள் தங்கள் வெறுப்பையும், மரணத்தின்போது மகிழ்ச்சியையும் வெளிப்படையாக வெளிப்படுத்துவது, எதிர்க்கும் அறிவற்ற மனிதர்களின் பொதுவான சூழ்நிலையாகி விட்டது.

அந்தக் குழுக்களின் பொதுவான அம்சம் என்னவென்றால், அவர்கள் பெரும்பாலும் ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் முன்னிலை சமாஜவாதி கட்சி போன்ற கட்சிகளின் ஆதரவாளர்களாக இருப்பதாகும். அனுரகுமார திசாநாயக்கவுக்கு சுகவீனம் ஏற்பட்ட அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுகவீனம் ஏற்பட்டிருந்தால் சமூக வலைத்தளங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் அறிக்கை வெளியாகும் போது கூட வெறுப்பை உமிழ்பவர்கள் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க முன்வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அனுர நோய்வாய்ப்பட்டிருந்தார். அரசியல் மிகவும் சூடாக இருக்கிறது. ஆனால், அனுரவுக்கு எதிரான எவரும் அவர் கஷ்டப்படுவதை விரும்பவில்லை. வெறுக்கத்தக்க கருத்துகள் எதுவும் பதிவிடப்படவில்லை. அவர் குணமாக வேண்டுமென கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் பிரார்த்தித்தனர். அதற்கு காரணம் அனர்த்தம் ஏற்பட்டால் அனுரவின் முகாமில் உள்ளவர்களே எதிர்வினை கருத்தை தெரிவிப்பதாகும்.



இலங்கை அரசியலில் இன்றுள்ள இரண்டு பிரதான முகாம்களுக்கிடையிலான வலுவான வேறுபாட்டை அடையாளம் காண இது ஒரு சந்தர்ப்பமாக நான் கருதுகிறேன். ஜனதா விமுக்தி பெரமுனவை உள்ளடக்கிய எதிர்க்கட்சி முகாம், தங்கள் எதிரிகளுக்கு மரணத்தையும் அழிவையும் வாழ்த்துகிறது. மற்றொரு முகாமில், ஆபத்தில் ஒருவரை மீட்க ஆசீர்வதிக்கும் மக்கள்.

இந்த நாட்களில் சமூக ஊடகங்களில் இந்த போக்கின் மற்றொரு நீட்டிப்பை நீங்கள் காணலாம் என்று நினைக்கிறேன். சமூக வலைதளங்களில் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் போது எதிரணியினரை அவமானப்படுத்துவதும், கேவலமாக திட்டுவதும் வழக்கமாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தி தொடர்பான சமூக ஊடகங்களை அவதானித்தால், ஜனாதிபதித் தேர்தல் யுத்தத்தின் ஆரம்பத்தில் காணப்பட்டதை விட முற்றிலும் மாறுபட்ட நிலைமையை இன்று காணமுடியும். தொடக்கத்தில், அவருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது காணப்பட்டது, ஆனால் எல்லா பதில்களும் ஒரே மட்டத்தில் இல்லை. அவர்களில் சிலர் மிகவும் தர்க்கரீதியாக உண்மைகளை முன்வைப்பது தெரிந்தது. மறுபுறம், கருத்து தெரிவிப்பதை விட, அவர்களின் பதில்கள் பெரும்பாலும் திசைக்காட்டியின் வெற்றிக்கு வாழ்த்துவதாக மட்டுப்படுத்தப்பட்டதைக் காண முடிந்தது.

ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறி விட்டது. அவமானங்கள், கேலிகள், அச்சுறுத்தல்கள், என பெரும்பாலான பிராசரங்கள் தயாரிக்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. அதனை கட்சிக்கு ஆரம்பத்தில்ல இருந்த புகழ் படிப்படியாக மாறும்போது ஏற்படும் அசௌகரியத்தால் அக்கட்சி வன்முறையை நோக்கி திரும்பியுள்ளதாகக் கருதலாம்.

பொதுமக்களின் ஆதரவு படிப்படியாகக் குறையும் போது வன்முறையாகவும் கட்டுப்பாடில்லாமல் செயல்படுவதே ஒரு திறமையாகக் குழு கருதுகிறது. இந்நாட்டின் சமூக ஆய்வாளரும், நிபுணத்துவப் பத்திரிகையாளருமான விக்டர் ஐவனின் இணையக் கட்டுரைகளுக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.



விக்டர் ஐவன் ஜே.வி.பியின் ஆரம்பகாலத் தலைவர். வெடிகுண்டு சோதனையின் போது அவர் தனது ஒரு கையை இழந்தார். 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் கலவரத்தில் ஏழாவது குற்றவாளியாக இருந்தார். பொடி அதுல என்று அழைக்கப்பட்ட இவர், சிறைவாசம் முடிந்ததும் ஜே.வி.பியில் இருந்து வெளியேறினார்.

ஏப்ரல் 1971 எழுச்சி பற்றி இதுவரை எழுதப்பட்ட சிறந்த புத்தகம் இவருடையதுதான். ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைவர்கள் நாட்டின் இளைஞர்களை எப்படி தவறாக வழிநடத்தினார்கள், அவர்கள் எப்படி அவர்களைத் துன்புறுத்தினார்கள் என்பது பற்றிய புலனாய்வுப் பகுப்பாய்வை அவரது படைப்பு முன்வைக்கிறது.

இந்நாட்களில் நாட்டில் நிலவும் அரசியல் நிலைவரங்கள் குறித்து விக்டர் ஐவன் தனது ஆய்வை இணையத்தில் முன்வைத்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக அவர் கூறுகிறார். இவற்றைப் பார்க்கும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு விசுவாசமாக இருப்பவர்கள் அதனை எவ்வாறு கூறுகிறார்கள் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். விக்டர் முன்வைத்த விடயங்கள் தொடர்பாக கல்விசார் பதிலைக் காட்டிலும் வழக்கமான அவதூறுகளை முன்வைப்பதை ஒரு திறமையாக அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

சமூகத்தை வெறுக்கும் பெரும்பான்மையானவர்கள் சமூகத்தில் உரிய அங்கீகாரம் பெறாதவர்களே என்று பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஒரு கிராமத்திலோ அல்லது பணியிடத்திலோ எந்தவித அங்கீகாரமும் இல்லாதவர்கள், சமூகத்தை வெறுக்கும் மக்கள், ஜே.வி.பியில் இணைந்துள்ள பெரும்பான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

சமூக வலைதளங்களுக்கு பதிலடி கொடுக்கும் தேசிய மக்கள் சக்தியின் நடைமுறையை அவதானிக்கும் போது, நிலைமையை ஏற்றுக் கொள்ளும் சூழல் உருவாகியிருப்பதாகவே தோன்றுகிறது. அந்த முகாமில் பழமைத்துவ வாதமே இயங்குகின்றது. மற்றொரு முகாம் நவீனமயமாக்கல் முகாம்.

மக்கள் நேசன் ...

# பிரான்ஸில் வாழும் இலங்கையர் ஏற்பாட்டில் கிரிக்கட் சுற்றுப்போட்டி















ருஸைக் பாரூக்

பிரான்ஸில் வாழுகின்ற இலங்கை முஸ்லிம்களின் பழைமை வாய்ந்த விளையாட்டு கழகமான 'ALL BLACKS CRICKET' கழகத்தினால் அண்மையில் மிக விமரிசையாகவும் சிறப்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு, நடந்து முடிந்த 'Grand European Cricket Tournament' போட்டித் தொடரில் சுவிஸ், இத்தாலி மற்றும் பிரான்ஸ் All Blacks விளையாட்டு கழகங்கள் பங்குபற்றின.

விறுவிறுப்பாக நடந்த மேற்படி போட்டிகளின் இறுதியில் சாம்பியன் கிண்ணத்தை 'FRANCE ALL BLACKS A' அணியினர் கைப்பற்றியதோடு RUNNER UP கிண்ணத்தை SWISS விளையாட்டுக் கழகத்தினர் பெற்றுக் கொண்டனர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் 'ALL BLACKS B' அணியினரும் இத்தாலி அணியும் போட்டியிட்டு 'All Blacks B' அணி வெற்றி பெற்றபோதும், மூன்றாவது இடத்தை சகோதரத்துவத்துடன் வெற்றியை பகிர்ந்து கொண்டமை அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது.

கௌரவ விருதுகள் போட்டியின் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்புக்கான விருது ரம்ழானுக்கும் அறிவிப்புக்கான விருது அறிவிப்பாளர் ஸஜாத்துக்கும் போட்டி ஏற்பாடு மற்றும் பங்களிப்புக்கான விருதை MAKARIM , BATHUSHA, ANOOS, THANIS, FAWMY, ISAM, ARSHAD, SHABIR ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.





# இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் jobonline.lk இணையத்தளம் அறிமுகம்

## ரணில் வில்லத்தரகே அறக்கட்டளை ஏற்பாடு

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக "ரணில் வில்லத்தரகே அறக்கட்டளை" யினால் www.jobonline.lk எனும் இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிலியந்தலை சுசிறி வரவேற்பு மண்டபத்தில் அறக்கட்டளையின் தலைவர் கெஸ்பாவ ஐ.தே.க அமைப்பளர் ரணில் விலத்தரகே வினால் இந்த இணையத்தளத்தின் அறிமுக விழா நடைபெற்றது.

Gflock நிறுவனத்திலும் ஏனைய முக்கிய வணிக நிறுவனங்களிலும் காணப்படும் தொழில்வாய்ப்புகளையும் கண்டறிந்து, பொருத்தமான வேலை வாய்ப்புகளை இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும். அவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை பயிற்சிகளின் அடிப்படையில் பொருத்தமான தொழில்வாய்ப்புகளை பெறுவதற்கு இந்த இணையத்தளத்தின் மூலம் சரியான வழிகாட்டலைப் பெறலாம். இந்த இணையத்தளம் மூலம், மிகப் பெரும் தனியார் நிறுவனங்களில் காணப்படும் கீழ் மட்டம் முதல் நிறைவேற்று மட்டம் வரையிலான பல்வேறு வேலை வாய்ப்புகளுக்கு செல்ல இந்த இணையத்தளத்தின் மூலம் முடியும்.

இந்த அறிமுக விழாவில் உரையாற்றிய ரணில் வில்லத்தரகே,

Gflock நிறுவனத்தில் மாத்திரம் மாதாந்தம் சுமார் 10 தொழில்வாய்ப்புக்கான வெற்றிடங்கள் உருவாகுவதோடு, அந்த வேலைவாய்ப்புகளை பூர்த்தி செய்ய, உரிய தகுதியை பூர்த்தி செய்பவர்களுக்கு இந்த இணையத்தளம் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று எமது நிறுவனத்திற்கு அவசியமான ஊழியர்கள், தொழில் வல்லுனர்களையும் கண்டுபிடிப்பது கடினமாகிவிட்டது.

எனவே, இது போன்ற இணையத்தளத்தை உருவாக்க வேண்டிய தேவை அவசியமாகி இருந்தது. இதன் மூலம், தனியார் துறைக்குத் தேவையான பொருத்தமான நபர்களை அடையாளம் காணும் வாய்ப்பைப் பெறுவது மிகவும் முக்கியமானதாகும்.





உங்களது விண்ணப்பப் படிவங்களை உள்ளிடுவதற்கு இந்த இணையத்தளத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் உரிய வணிக நிறுவனங்கள் தமக்குத் தேவையான பணியாளர்களை அடையாளம் காணும் வாய்ப்பு காணப்படுகின்றது. அத்துடன், இதில் வெளியிடப்படும் வேலை வாய்ப்புகளை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்தின் ஊடாக தொழில் வாய்ப்புகளை சிரமமின்றி தேடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாகும். "www.jobonline.lk" எனும் இணையத்தளத்தில், வேலை தேடும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களது தகைமைகளுக்கு ஏற்ப தொழில் வாய்ப்புகளை வழங்குவதே எமது நோக்கமாகும் என, அதன் தலைவர் ரணில் விலத்தரகே மேலும் தெரிவித்தார்.

# இ.தொ.காங்கிரஸின் ஏற்பாட்டில் மாத்தளையில் தேர்தல் பிரசார கூட்டம்





இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில், ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மாத்தளை ஓபல்கல மற்றும் ஹுணுகல ஆகிய இடங்களில் நேற்று 'வேண்டும் ரணில், மீண்டும் ரணில்' எனும் தலைப்பில் தேர்தல் பிரசார கூட்டமொன்று நடைபெற்றது.

இதில் மாத்தளை மாவட்ட நகர்ப்புற மற்றும் தோட்டங்களை உள்ளடக்கிய வகையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பிரசார கூட்டங்களில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும், இ.தொ.கா உபதலைவருமான முத்துசாமி சிவஞானம், மாத்தளை மாநகர சபை முன்னாள் நகராதிபதி சந்தனம் பிரகாஷ், முன்னாள் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்டத் தலைவிமார்கள், தோட்டத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.





உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு சுமித்ரயோ அமைப்பின் யாழ். மாவட்ட கிளையால் ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலையில் விழிப்புணர்வு நிகழ்வொன்று நடைபெற்றது. (படம் :கரவெட்டி தினகரன் நிருபர்)

# கட்சி தாவுவோருக்கு தலைமை தயவுகாட்டக் கூடாது

## மன்னார் மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்!

உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் எங்களை விட்டுச் சென்றாலும் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீனுடன் உறுதியாகச் செயற்பட்டு, சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதி செய்யவுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மன்னார் பிரதேச சபை, மன்னார் நகர சபை, முசலி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.எச். எம்.முஜாஹிர், முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.பைரூஸ், இன்னும் சபையின் முன்னாள் உறுப்பினர் வாஹித் மற்றும் மன்னார் நகர சபை முன்னாள் உறுப்பினர் நவ்சீன் உள்ளிட்ட ஏனைய முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் தெரிவித்ததாவது;

"எமது கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சி மாறவில்லை. மாறாக குரங்குகள் போல, அங்கும் இங்கும் தாவித்திரிகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தோற்றவுடன் மீண்டும் எம்மிடமே இவர்கள் வருவர். இதற்கு முன்னரும் இவ்வாறு இவர்கள், தாவித்தாவியே திரிந்தனர். கட்சித் தலைமை இனியும் இவ்விடயத்தில் தயவு காட்டக்கூடாது.

நாலாம் கட்டை அருவி ஆறு தொடக்கம் மறிச்சுக்கட்டி வரைக்கும், மறிச்சுக்கட்டியிலிருந்து அரிப்பு வரைக்குமான எமது மீள் குடியேற்றத்தில், எமது தலைவர் ரிஷாட் பதியுதீன் கடுமையாக உழைத்தார்.

காடுகளை அழித்து, துப்புரவுப் பணிகளை முன்னெடுத்த காலத்தில் ஏற்பட்ட இடர்களை இல்லாது ஒழித்தவர் எமது தலைவர் ரிஷாட் பதியுதீன்.

வீடுகளை நிர்மாணித்து, வீதிகளைப் புனரமைத்ததுடன் வாழ்வாதார உவிகளை வழங்கினார். எமது பிராந்திய முன்னேற்றத்துக்கு இந்தத் தலைமையே வேண்டும்.

எங்களோடு இருந்து எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு, எச்சில் ஆசைகளுக்காக சிலர் கட்சிக்குத் துரோகம் இழைத்துள்ளனர்.

இவர்களுக்கு இனிமேலும் மன்னிப்போ அல்லது கருணையோ காட்டக்கூடாதெனக் கோருகிறோம்" என்று தெரிவித்தனர்.

# தமிழரை அச்சுறுத்தும் தொனியில் அநுர அரசியல் செய்யக்கூடாது !

## தாயக மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அருண் சித்தார்த்



தமிழ் மக்களை அச்சுறுத்தும் தொனியில், யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற மக்களின் உரிமைகளில் கை வைக்கும் விதத்தில் அநுரகுமார திசாநாயக்க பேசியதை வன்மையாக கண்டிப்பதாக தாயக மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அருண் சித்தார்த் தெரிவித்துள்ளார்.

தாயக மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் சர்வஜன அதிகார ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர சார்பில் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய தாயக மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அருண் சித்தார்த் மேலும் கூறுகையில், அநுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் பேசும் போது, 'தென்னிலங்கை ஒரு மாற்றத்துக்காக தயாராகி வருவதாகவும் தென்னிலங்கை மக்கள் தனக்கு வாக்களிக்க தயாராக இருப்பதாகவும் அது நிச்சயமான வெற்றியெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றியில் தமிழ் மக்கள் கட்டாயம் பங்காளிகளாக இருக்க வேண்டுமெனவும் அதற்கு எதிரானவர்களாக தமிழர்கள் மீது முத்திரை குத்த வாய்ப்புள்ளது.

எனவே தமிழ் மக்கள் நீங்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

அவர் கூறிய கருத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம், ஒரு அரசியல் முதிர்ச்சியடைந்த ஜனாதிபதி வேட்பாளர் ஏனைய சக மக்களை அரவணைக்கும் தொனியில் பேச வேண்டும். ஆனால் அவரின் மனதில் இருந்த வெறுப்பு வெளியே வந்த தருணம் அது.

தாங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற சுதந்திரமும் உரிமையும் மக்களிடம் உள்ளது. அந்த உரிமைகளில் அநுரகுமார திசாநாயக்க கை வைத்துள்ளாரென எண்ணுகின்றோம்.

இவ்வாறான சண்டித்தனமான அரசியல் இங்கு வந்து செய்ய வேண்டாமென தேசிய மக்கள் சக்திக்கு தெரிவித்து கொள்கிறோம்.

பயந்து அரசியல் செய்த காலம் எல்லாம் முடிந்து விட்டதாக தாயக மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அருண் சித்தார்த் தெரிவித்தார்.

# தேசிய மக்கள் சக்தியின் கோட்பாடுகள் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவை

## எம்.எச்.ஏ.ஹலீம் எம்.பி

(மாவத்தகம நிருபர்)

தேசிய மக்கள் சக்தியின் கோட்பாடுகள் ஒருபோதும் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்களையே கொண்டுள்ளதாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பொதுவாக மனித சமூக பண்பாட்டு அம்சங்களுக்கு முரணான அங்கீகரிக்க முடியாத பல விடயங்கள் தேசிய மக்கள் சக்தியின் கோட்பாடுகளில் உள்ளன.

ஆகவே எமது வாக்குகளை முஸ்லிம்கள் புத்திசாதுரியமாக சிந்தித்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை அறிமுகப்படுத்திய ஜே.ஆர் ஜெயவர்தன முதல் கடைசியாக போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ வரையில் பல ஜனாதிபதிகளை நாங்கள் இந்த நாட்டில் தெரிவு செய்துள்ளோம். இருந்தபோதிலும் இந்த ஜனாதிபதியை தெரிவு செய்வதிலேயே பல சிக்கல்களை நாங்கள் காணுகின்றோம்.



நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய தருணத்தில் பொருளாதாரத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புகின்ற தலைவரைத் தெரிவு செய்யும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக இது பார்க்கப்படுகின்றது.

அப்படிப் பார்க்கின்றபோது இந்த தேர்தலில் 39 பேர் போட்டியிடக் களமிறங்கியுள்ளார்கள். அதில் சுமார் 15 பேர் அளவில் தேர்தல் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அதில் நால்வரிடையில் தான் போட்டி நிலவுகின்றது.

எமது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இந்த நாட்டின் வங்குரோத்து நிலைமையை நீக்கி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற சக்தி வாய்ந்த தலைவர்.

கடந்த காலங்களில் சஜித்துக்கு எதிராக செயற்பட்ட பலர் இன்று அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அக்குறணை ஊரைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக இது பார்க்கப்படுகின்றது.

நாங்கள் எல்லோரும் பல்வேறு விதமான பிரச்சினைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலைமை கட்டாயமாக மாற்றம் பெற வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கட்சி தான் ஐக்கிய மக்கள் சக்தி. ஆகவே உங்கள் ஆதரவை வழங்குங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 'எமது காலம்' வரலாற்று அருங்காட்சியகம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

பண்டைக்கால விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு 'எமது காலம்' என்ற தொனிப் பொருளில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் நடாத்தப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட சர்வோதய இயக்குனர் திருமதி சசிரேக்கா நகுலேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னாரில் செப்டெம்பர் 4ஆம் திகதி ஆரம்பமானது.

'சேச் வோ கொமன் கிறவ்ன்ட்' என்ற நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மாவட்ட சர்வோதயத்தின் அனுசரணையுடன் இந்நிகழ்வு நடைபெற்றுவருகின்றது. இதில் பழமை வாய்ந்த கண்காட்சிகளுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள முக்கியமான விடயங்களும் காணப்படுகின்றன. இலங்கையின் 70 வருட வரலாற்றை அனுபவிக்கும் ஒரு தருணமாக இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் யாவரும் இதை கண்டு களிப்பது மட்டுமல்ல யாவற்றையும் நன்கு அறிந்து செல்லும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

# முன்னா பியூட்டி அகாடமியின் பட்டமளிப்பு விழாவும் கண்காட்சியும்









முன்னா பியூட்டி அகாடமியின் பட்டமளிப்பு விழாவும் மற்றும் கண்காட்சியும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (09) விமரிசையாக நடைபெற்றது.

முன்னா பியூட்டி அகாடமியின் நிறுவனத்தின் தலைவி முனாபிரா றிஸ்வான் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், 150 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. மேலும், 10 ஆசிரியர்களின் சாதனைகள் கௌரவிக்கப்பட்டன. 30 பேர் 'பேஸ்ட் பர்ஃபோர்மர்' (Best Performer) விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தேசிய பத்திரிகையான தினகரன் மற்றும் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், மற்றும் கௌரவ அதிதியாக அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி / சிரேஷ்ட எழுத்தாளர் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், சிறப்பு அதிதிகளாக ஸ்கை தமிழ் ஊடகம், துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே எம் பாஸித், மற்றும் துணிந்தெழு சஞ்சிகையிலன் பிரதம ஆசிரியரும் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளருமான ஷிஹானா நௌஃபர் , துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் ஷாமேன் நிசாம்தீன். விஸ்டம் பெரடைஸ் முகாமையாளரும் பணிப்பாளருமான சாரா சிராஜ், யுனிக் பியூட்டி சலூன் பணிப்பாளர் சித்தி மர்ஷூகா மோட்டிவேஷனல் ஸ்பீக்கர் voice of raaz, அருந்ததி பணிப்பாளர் மாற்று மோதிரம், திருமதி மேகலா, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு முகாமையாளர் திருமதி. ரிப்கா, N. R bridal பணிப்பாளர் ரிஸ்மினா உட்பட இலங்கையில் உள்ள முக்கியஸ்தர்கள், அழகுசாதனத் துறையின் முன்னணி நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்தோர் கலந்து சிறப்பித்தனர்.

# பெண்களும் தற்காப்புக் கலையும்



பெண்கள் நம் நாட்டின் கண்கள் என பலர் சொல்லி நான் அடிக்கடி கேள்விப்பட்டதுண்டு. அப்படிப்பட்ட கண்களில் இன்று இரத்தக்கண்ணீர் வழிந்து கொண்டிருப்பது யாருக்கு தெரிகிறது. ஒவ்வொரு பெண்ணும் இன்று தனக்கென ஓர் இலக்கினை கொண்டு அந்த இலக்கை அடைவதற்கு தன் பாதையை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறாள். ஆனால் அவர்கள் தங்கள் கனவை அடைவதற்குள் எத்தனை போராட்டங்களை அன்றாடம் சந்திக்க வேண்டி உள்ளது? ஒரு பெண் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறான நபர்களை சந்திக்க நேர்கிறது. அவ்வாறு அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் நபர்களில் பலர் முட்களாக இருக்கின்றனர். அவர்களை வழியில் இருந்து அகற்றியே முன் செல்ல வேண்டியுள்ளது.

பெண்ணைவிட ஒரு சக்தி இல்லை என்று அனைவரும் கூறுவர்; உண்மைதான். ஒவ்வொரு பெண்ணின் பிரசவம் என்பது அவர்கள் மறுஜென்மம் அடைவது போன்ற வலியை தருகின்றது. இவ்வாறு பல வலிகளை பொறுத்து, ஒரு உயிரை இந்த பூமிக்கு கொண்டுவரும் பெண்கள் மனதளவில் தைரியமாக இருந்தாலும் பிரச்சினைகளின்போது செய்வதறியாது தவிக்கின்றனர்.

ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை எத்தனையோ பெண்களின் குமுறல்களை இவ்வுலகம்; கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆணுக்கு பெண் நிகரென கொள்வோம் என கூறுகின்றார்கள். ஆனால் உடலளவில் பெண்கள் மென்மையானவர்கள், இது இயற்கையின் படைப்பு. இறைவன் பெண்ணைவிட ஆணை வலிமையாக படைத்தது பெண்ணுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கவே மாறாக, அவர்களை பலவந்தப்படுத்த அல்ல. ஆனால் பெரும்பாலான ஆண்கள் தங்கள் பலத்தினை வைத்து இன்று பெண்களை கொடுமைப்படுத்தி வருகின்றனர். இதனை தடுப்பதற்கு பெண்களே தங்களை தற்காத்துக் கொள்வது அவசியமாகின்றது.

பூவும் பெண்மையும் ஒன்றென்பர். அப்படிப்பட்ட பூக்கள் இன்று ஒவ்வொரு மூலையிலும் நொடிக்கு நொடி கசக்கி எறியப்பட்டு கொண்டேதான் இருக்கின்றன. இதனை தடுப்பதற்கு எத்தனையோ சட்டங்கள் வந்தாலும் அவை எவையும் பயனளிக்காமலே போனது. பெண்களுக்கான வன்முறை எல்லா இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கின்றது. ஆம், ஒவ்வொரு பெண்ணும் காலையில் வீட்டிலிருந்து வெளியே சென்று பின் வீடுதிரும்பும்வரை வரை அவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். பாதையில் நடக்கும் போது பல கண்களின் தீண்டல்களிலும், பேருந்தில் பயணம் செய்யும் போது பல கைகளின் உரசல்களுக்கும், பாடசாலை செல்லும் போது தீயவர்களின் பார்வைகளுக்கும், தொழில் புரியும் இடங்களில் ஆதிக்க வர்க்கத்திடமும் பெண்கள் அடிமைப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றார்கள். பெண்ணின் அனுமதியின்றி அவளிடம் அத்துமீறல், பாலியல் வன்முறை, தன் பேச்சினால் அவளைக் காயப்படுத்துதல், காமக் கண்களினால் அவளைத் தீண்டுதல் என பெண்களுக்கு எத்தனையோ கொடுமைகள் அன்றாடம் நேர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

இன்று எந்தப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தாலும் எந்த சமூகவலைத்தளங்களுக்கு சென்று பார்த்தாலும் பெண்களுக்கு அன்றாடம் நடக்கும் வன்முறையை பற்றிய செய்தியே எமது கண்களுக்கு புலப்படுகிறது. இன்னும் வெளிவராமல் எத்தனையோ ரகசியங்கள் புதைந்துள்ளன. தங்களுக்கு ஏற்படும் கொடுமைகளை வெளியில் சொல்லவும் பெண்கள் தயங்குகின்றனர் . சமூகம் தன்னை எந்த விதத்தில் பார்க்கும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். இந்த சமூகம் தன் மீது குற்றம்சாட்டி விடுமோ என்று தங்களுக்கு நேரும் கொடுமைகளை வெளியில் சொல்லாமல் மறைக்கின்றனர்.

வழியில் செல்லும் ஒரு பெண்ணைப் பற்றி தவறாக கதைக்கும் போது இந்த சமுதாயம் அந்தப் பெண் அணிந்த ஆடையே முதலில் குறை சொல்கிறது. மாறாக அவளை தவறாக பார்த்தவர்களின் கண்களையும் பேசிய அவர்கள் வார்த்தைகளையும் குறை கூறுவது இரண்டாம் பட்சமாகவே அமைகிறது தன்னை ஒரு ஆபத்திலிருந்து காத்துக்கொள்ள தற்காப்பு கலையை தெரிந்து வைத்திருப்பது ஒவ்வொரு பெண்ணிற்கும் அவசியமாகின்றது. தற்காப்பு கலை என்பது எமது சுய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படும் சண்டை பயிற்சிகளையும், ஒழுங்கமைக்கப்பட்ட மரபுகளையும், செயற்பாடுகளையும் கொண்டமைந்தவையாகும். அதாவது தமக்கு ஏற்படும் உடல் ரீதியான அச்சுறுத்தல்களுக்கு எதிராக தம்மை பாதுகாக்கும் வகையில் எதிரிகளை தோற்படிப்பதாகும். ஏராளமான தற்காப்பு கலைகள் இருக்கின்றன. கராத்தே, குங்ஃபூ , மல்யுத்தம், சிலம்பாட்டம், ஜூடோ எனப் பல்வேறான தற்காப்பு கலைகள் காணப்படுகின்றன.

எவ்வாறு ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி நல்ல நிலைமைக்கு கொண்டுவரத் துடிக்கின்றார்களோ அதுபோல அவர்களின் தன்னம்பிக்கையும் அவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், கண்டிப்பாக தற்காப்புக் கலையைக் கற்றுக் கொடுத்தல் இன்றைய சமூகத்தில் ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் ஆரம்பக் கல்வித் தொட்டு அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது போன்று கண்டிப்பாக தற்காப்புகலையும் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் எனத் தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திற்கும் நேரத்தினை ஒதுக்கி அவர்களுக்கு கல்வியில் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது போன்று அவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள தற்காப்பு கலையினை பயில்வதற்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

இது பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள கை கொடுக்கின்றது. அநேகமாக பல பாடசாலைகளில் இன்று தற்காப்புக் கலை கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் எல்லா மாணவர்களும் அதில் பங்கு கொள்வதில்லை.

ஆர்வமுள்ள மாணவர்களே அதனைக் கற்றுக்கொள்கின்றனர். பெண்களின் எண்ணிக்கை குறைவே.

சில வேலைகளில் இந்த கற்கைநெறிகளை கட்டண முறையில் கற்க வேண்டிய தேவையும் பாடசாலைகளில் இருந்து வருகிறது. இதனால் பல்வேறு மாணவர்கள் இந்த தற்காப்புக் கலையை கற்க முடியாத சூழ்நிலைகளுக்கு தள்ளப்படுகின்றனர். இதனை இலவச திட்டமாக கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் தற்காப்பு கலையை கற்று, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு பெண்ணும் கண்டிப்பாக தற்காப்பு கலையை அறிந்து வைத்திருப்பதன் மூலம் அவர்கள் தங்களை வன்முறைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லவும் வழிவகுக்கிறது. இவ்வாறு தன்னை தவறான பார்வையுடன் எவரையும் நெருங்க விடாமல் தடுப்பதற்கு தற்காப்பு கலை ஒரு ஆயுதமாக பெண்களுக்கு பயன்படுகிறது.

இளங்கோவன் நிரோஷிகா
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல .: 4-3/9/2011/IR/134**

எனது குறிப்பு இல : DSWA/LND/4/ACQUI/F1/32

இங்கே கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2024.02.10 ஆம் திகதி 23/70/31 ஆம் இலக்க, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் (III) பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

01. மாகாணம் : தெற்கு
02. மாவட்டம் : ஹம்பாந்தோட்டை
03. பிரதேச செயலாளர் பிரிவு : வலஸ்முல்ல
04. கிராம உத்தியோகத்தர் பிரிவு : இல. 556 கெகிரிஓபட
05. ஊர் : கெகிரிஓபட
06. ஆரம்ப வரைபட இல. : இ.கி.வ 224
07. துண்டு இல : 1397,1399,1400,1401,1402,1405,1406,1408,1409,1411,1412,1415,1419,1420,1425,1429,1430,1431,1433,1434,1435,1437,1438,1439,1440,1441,1442,1443,1445,1446,1448,1449,1450,1452,1454,1455,1456,1458,1459,1460,1462,1463,1464,1466,1469,1471,1473,1474,1477,1479,1481,1482,1484,1487,1489,1490,1491,1493,1495,1499,1501,1504,1505,1506,1508,1509,1510,1512,1514,1517

**குமுது சி லொகுஹேவாகம**
**பிரதேச செயலாளர்**
**வலஸ்முல்ல**
**ஆம் திகதி**
**வலஸ்முல்ல பிரதேச செயலகம்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 175,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 செப்டெம்பர் 18ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124L202 | LKA18225C213 | LKA36425I198 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 90,000 | 70,000 | 15,000 | 175,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 செப்டெம்பர் 18
தீர்ப்பனவுத் திகதி : 2024 செப்டெம்பர் 20
வழங்கப்படும் திகதி : 2024 செப்டெம்பர் 20
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 செப்டெம்பர் 18, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாமென்ற அதேவேளை மேலே குறிப்பிடப்பட்டவாறு குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்குகிடையிலான தொகைகளை மீள்ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன் வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## அங்கத்தவர் பெயர்பட்டியலை காட்சிப்படுத்துதல்

வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவு பிரதேசத்தில் 2024-06-30ஆம் திகதியில் முழுமையான வாக்குரிமை அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலைக் காட்சிப்படுத்துதல் 2024-09-13ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரை பின்வரும் பிரதேசங்களில் மற்றும் சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் கடமை நேரங்களினுள் காட்சிப்படுத்தப்படும். திருத்தங்கள் இருக்குமானால் 2024-09-26ஆம் திகதிக்கு முன் செயலாளர், வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கம், ஹெட்டிபொல எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

இங்கு வழங்கப்பட்டுள்ளதானது 1981/2/2016 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் உள்ள விதிமுறைகளின் பிரகாரம் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | அங்கத்தவர் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01 | பண்டுவஸ்நுவர | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 02 | ஹெட்டிபொல | ஹெட்டிபொல பிரதேசத்தில் |
| 03 | குரு/கடவலகெதர | நுகவெல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 04 | பண்டாரகொஸ்வத்த | பண்டாரகொஸ்வத்த பிரதேசத்தில் |
| 05 | மிதியால | பண்டாரகொஸ்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 06 | திவுல்வெவ | திவுல்வெவ பிரதேசத்தில் |
| 07 | மதுல்ல | மதுல்ல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 08 | டேகெவ | ஹெட்டிபொல பிரதேசத்தில் |
| 10 | மடஇன | மடஇன பிரதேசத்தில் |
| 11 | அக்குரணை | அக்குரணை பிரதேசத்தில் |
| 12 | மங்குலாகம மெதகம | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 13 | மண்டபொல | மண்டபொல பிரதேசத்தில் |
| 14 | ரம்பேவ | மதுல்ல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 15 | மொரகனே | ஹித்தரபொல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 16 | கனோகம | கனோகம பிரசேத்தில் |
| 17 | திஸ்ஸவ | திஸ்ஸவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 18 | துனுபொத | துனுபொத பிரதேசத்தில் |
| 19 | மாடிஹேன | கல்லெஹபட்டிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 20 | ஹித்தரபொல | ஹித்தரபொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 21 | தெமடவ | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 22 | கிரிமெட்டியாவ | கிரிமெட்டியாவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 23 | ஹங்வெல்ல | ஹங்வெல்ல பிரதேசத்தில் |
| 24 | விஜய உதாகம | விஜய உதாகம மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
